சோழர் குல தீபம்—சுடர் 2

இராஜேந்திர சோழன்

சென்னை
அர்ச். காபிரியேல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர், இலக்கையடிக் கவுணிய
இரா. சிவ. சாம்பசிவசர்மா
எழுதியது

C. கேசவராமாநுஜலு நாயுடு அண்டு கம்பெனி
எடுகேஷனல் பப்ளிஷர்ஸ்
விநாயகமேஸ்திரி தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை

ட [illegible] 932 [அணா 6

சோழர் குல தீபம்—சுடர் 2

இராஜேந்திர சோழன்

இலந்தையடிக் கவுணிய
இரா. சிவ. சாம்பசிவசர்மா

சோழர் குல தீபம்—சுடர் 2

இராஜேந்திர சோழன்

சென்னை
அர்ச். காபிரியேல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர், இலக்கையடிக் கவுணிய
இரா. சிவ. சாம்பசிவசர்மா
எழுதியது.

C. கேசவராமாநுஜலு நாயுடு அண்டு கம்பெனி
எடுகேஷனல் பப்ளிஷர்ஸ்
விநாயகமேஸ்திரி தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை
பதிப்புரிமை] 1932 [அணா 6

முன்னுரை

—:—

தமிழ் மொழியின் பெருக்கனைத்தும் இளஞ்சிறுவர் நன்குணர்தல் வேண்டும். தாய் மொழியில் பற்றும், தாய் நாட்டின்மேல் வைக்கும் தேச பக்தியும் இளஞ்சிறுவர் நன்னூல்களைப் படித்துணர்தலால் அடைவர். அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன யாவை எனின், செந்தமிழ் வளம் செறிந்த தேச சரித்திர சம்பந்தமுடைய சிறு நூற்களே. அவைகளை எளிய இனிய நற்றமிழ் நடையில் எழுதித் தர முன் வந்துள்ளேன். இச் சிறுநூல் சோழ அரசர்களில் ஒருவனான இராஜேந்திர சோழனைப்பற்றிக் கூறுவதாகும். இச் சிறுநூல் இளைஞர் இயல்பறிந்து எழுதப்பட்டுள்ளதாதலின் எந்நலமும் பொருந்தியிருத்தல் காணலாம். மங்கலத் தமிழ் மொழியின் மாண்பும் இச்சிறு நூலில் மாணவர்கள் உணரவேண்டிய அளவு இனிது விளக்கப்பட்டுள்ளது. ஆதலின் இச்சிறுநூல் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன். பிழை காணிற் பொறுக்க.

பொதுமறையகம்,
சென்னை.

இங்ஙனம்
இரா. சிவ. சா. சர்மன்

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	இளமைப் பருவம் ...	... 1
2.	படை எழுச்சி ...	... 9
3.	வடநாட்டுப் படை எழுச்சி	... 15
4.	வடநாட்டு மன்னரை வலியழித்தல்	... 21
5.	வங்காளம்	... 27
6.	கங்கை நீர் கொணர்தல் ...	... 32
7.	கங்கை கொண்ட சோழ புரம்	... 45
8.	அம்மங்காதேவி திருமணம்	... 53
9.	கடாரப் படையெடுப்பு ...	... 69
10.	இராஜேந்திரன் :—அரசியல், குணம், இறுதிக் காலம் ...	... 74

உ

இராஜேந்திர சோழன்

1. இளமைப் பருவம்

தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு எனப்படும். தமிழ் நாட்டைத் தமிழகம் என்று கூறுவர் பெரியோர். தமிழ் நாட்டில் வாழும் மக்கள் தமிழ் மொழியைப் பேசுவார்கள். ஆதலினால் அவர்கள் தமிழர்கள் என்றழைக்கப்படுவர். தமிழ்மொழி அவர்களுக்குத் தாய்மொழி.

தமிழ்நாடு மிகவும் பழமையானது. பழமையான காலம் தொடங்கித் தமிழர்கள் மிக்க நாகரிகமுடையவர்களா யிருந்தனர். அவர்கள் நாடும் மிக்க நாகரிகம் பெற்றது. தமிழ்நாடு மூன்று பெரும் நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பனவாம். சேரநாட்டரசர்களுக்குச் சேரர் என்றும், சோழநாட் டரசர்களுக்குச் சோழர் என்றும், பாண்டியநாட் டரசர்களுக்குப் பாண்டியர் என்று பெயர்.

சோழநாடு மிக்க செழுமை வாய்ந்தது. அந்நாட்டில் காவிரிநதி பரந்து பாய்ந்து வளப்பத்தை அளிக்கின்றது. அதனால் அந்நாடு செல்வம் மிகப் படைத்துள்ளது. காவிரிநதி அந்நாட்டில் ஓடுவதால் அந்நாட்டிற்குப் பொன்னிநாடு என்றும், செம்பியர்களால் ஆளப்படுவதால் செம்பியன் நாடு என்றும் பெயர்கள் உண்டு.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அந்நாட்டைப் பல சோழவரசர்கள் அரசுபுரிந்தனர். அவர்களுள் மிக்க கீர்த்தி வாய்ந்தவன் இராஜராஜசோழன். அவன் காலத்திற்கு முன்பு சோழநாடு மிக்க கொடுமை எய்தி நலிவுற்றிருந்தது. பல்லவர் என்னும் ஒருவகைக் குல அரசர்கள் சேர சோழ பாண்டிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு அநீதிகள் பலவற்றைச் செய்து வந்தார்கள். அதனால் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் குடிகளும் மிக்க துன்பத்திற்கு ஆளாகியிருந்தனர். சுமார் அறுநூறு வருஷங்கள் வரையிலும் சேர சோழ பாண்டிய நாடுகளைப் பல்லவர்கள் தம் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தனர். கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்பே அந்நாடுகள் விடுதலையடைந்து சுயேச்சை பெற்றன.

கி. பி. 985-ம் ஆண்டு முதல் 1012-ம் ஆண்டு வரைச் சோழநாட்டை இராஜ ராஜ சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் கல்வியில் சிறந்தவன்; வில்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம், முதலியனவற்றில் நன்கு பழகிப் பயின்றவன்; குடிகளைத் தன்னுயிர்போல் கருதிப் போற்றிவந்தான். குடிகள் அனைவரும் அவனைத் தந்தைபோல் எண்ணி அச்சமின்றி இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

இராஜ ராஜ சோழன் பல நாடுகளையும் ஜயித்துத் தன் நாட்டை விசாலப்படுத்தினன். அவன் அரசியல் முறையைச் சீர்திருத்திக் குடிகளுக்குப் பல நன்மைகளைப் புரிந்தான். அவன் தெய்வபக்தி உடையவன். தஞ்சாவூரில் 'இராச ராசேச்சரம்' என்னும் கோயிலையும் கட்டுவித்தான். அவன் சரித்திரத்தை நாடகமாக எழுதி அக்காலத்தில் நடித்தினர் என்றால் அவன் சிறப்பை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

இராஜ ராஜ சோழனுக்கு மனைவியர் ஐவர். தந்தி சத்தி விடங்கி, திரைலோக்கிய மாதேவி, பஞ்சவன் மாதேவி, அபிமான வல்லி, சோழ மாதேவி என்பார் ஐவரும் சகோதரிகள்போல ஒருமனப்பட்டு வாழ்ந்து வந்தனர். இராஜராஜன் இளவரசனுயிருக்கும் போதே தந்திசக்திவிடங்கியை அவன் பெரிய தகப்பனை மதுராந்தகன் மணம்புரிவித்தான். தந்தி சக்தி விடங்கியே ஐவரினும் மூத்தவள். இராஜ ராஜனுக்கு அவளிடமாக ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் பிறந்தன. இராஜ ராஜன் பிள்ளைக்கு இராஜேந்திரன் என்றும், பெண்ணிற்குக் குந்தவை என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தான். குழந்தைகள் இருவரும் பெரியோர்கள் நட்பும் அம்புலிப் பிறையும் வளர்வதுபோல் வளர்ந்துவந்தனர்.

இராஜேந்திரன் தக்க வயது அடைந்ததும் சிறந்த ஆசானிடம் ஒப்புவிக்கப்பட்டுக் கல்வி பயின்று வந்தான். அவனுக்கு யானை ஏற்றம், குதிரைச் சவாரி, தேர் நடத்தல், வில், வாள், வேல் முதலிய ஆயுதப் பயிற்சி முதலியன அளிக்கப்பட்டன. இராஜேந்திரன் உருவிலும் திருவிலும் ஒப்புயர்வு

அற்று விளங்கினன். இவன் இளைஞனாய் இருந்த பொழுதே படைக்கலப் பயிற்சியின் பயனாக உரம் பெற்றுச் சிங்கக் குருளைப்போல் விளங்கினன். பேராற்றல் படைத்த அரசர்களும் வீரர்களும் அவனது புயவலி கண்டு அஞ்சினர். அஞ்சா நெஞ்சம் படைத்த இராஜேந்திரன் போரில் பகைவர்களைப் பின்னிடைந்து ஓடும்படி செய்வதில் தீரன். அவன் இளையவனாய் இருந்தும் தந்தை இராஜ ராஜன் படையெடுத்துச் செல்லுங் காலத்தெல்லாம் தானும் உடன் சென்று போரிற் பழகி வந்தான். இராஜ ராஜன் படை எடுத்துச் செல்லுங் காலத்தில் இராஜேந்திரன் நாட்டைக் காத்து நீதிபுரிந்து வந்தது முண்டு. அச் சமயங்களில் அவன் சகோதரி குந்தவை அவனுக்குத் துணையாக விருந்தாள். குந்தவை கல்வி கேள்விகளால் சிறந்த அறிவு படைத்தவள். இராஜ ராஜனுக்கு மகனும் மகளும் இருகைகளென விளங்கினர். அதனால் அவன் பல்வேறு தேசங்களின்மீதும் படை எடுத்துச் சென்று போர்புரிந்து வெற்றியுடன் மீண்டான்.

இப்பொழுது கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களாக இருக்கும் பாகத்திற்கு அக்காலத்தில் வேங்கைநாடு என்று பெயர். அதனைச் சளுக்கியர் என்பார் அரசாண்டு வந்தனர். கி. பி. 972-ம் ஆண்டு முதல் கி. பி. 989-ம் ஆண்டு வரை அந்நாட்டில் தகுந்த அரசர்கள் இல்லாமையால் உட்கலகங்கள் உண்டாயின. கி. பி. 985-ல் அரியணை ஏறிய இராஜராஜன் அந்நாட்டின் நிலையை நன்கறிந்துகொண்டான். அக்காலத்தில் இராஜேந்திர சோழன் வேற்று நாட்டரசர்கள்மீது படை எடுத்துச் சென்று போர்

புரியும் ஆற்றலும், ஆண்மையும், அஞ்சாமையும் பெற்றிருந்தான். இராஜராஜன் அச்சமயம் பிறிதோர் நாட்டின்மீது படை எடுத்துச் சென்றிருந்ததனல் வேங்கி நாட்டின்மீது படை எடுத்துச்செல்ல முடிய வில்லை. ஆதலால் இராஜராஜன், ஒரு படையுடன் சென்று வேங்கிநாட்டைக் கைப்பற்றிவரும்படி இரா ஜேந்திரனை அனுப்பினான்.

வேங்கிநாட்டை விமலாதித்தன் என்பவன் அப் பொழுது ஆண்டுவந்தான். அவன் இளம் பருவத் தினன். கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அவன் ஆட்சி புரிந்துவந்தான். விமலாதித்தன் கீழைச் சளுக்கிய வமிசத்தினன். அவன், தன் நாட்டில் தோன்றிய உட்கலகங்களைப் பல்வேறு முறையிலும் அடக்க முயன்றான். ஆயினும் அம்முயற்சி அவனுக் குப் பெரும்பயன் அளிக்க வில்லை.

இராஜேந்திரன் தந்தையின் கட்டளைப்படி சிறந் தோர் பெரும் படையைத் திரட்டிக்கொண்டான். அப்போது இராஜ ராஜன் படையெடுத்துச் சென் றிருந்ததால் குந்தவையைத் தஞ்சாவூரில் இருத்தி விட்டுத்தான் படையுடன் வடநாடு நோக்கிச் சென் றான். குந்தவை அவன் திரும்பி வருமளவும் அரச காரியங்களைப் பார்த்து வந்தாள். இராஜேந்திரன் பெரும் படையுடன் சென்று கலியாணபுரத்தை முற்றுகையிட்டான். விமலாதித்தனுக்குச் சோழன் படையெடுத்து வந்து முற்றுகையிட்டது அச்சத் தைத் தந்தது. சோழன் படைவலியைக் கண்டு அவன் கலங்கினான் என்றே கூறவேண்டும். அவன் உள்நாட்டுக் கலகங்களால் அல்லலுற்றிருந்தவன் ஆத

லின் சோழனை வெல்லக்கூடிய அவ்வளவு பெரும் படையை எவ்வாறு ஆயத்தப்படுத்துவது என்று திகைத்தான். தோல்வி தன்னுடையதே என்பதை அவன் அந்நிலையில் உண்மையில் உணர்ந்தான். அவன் க்ஷத்திரியன் அல்லவா? அவன் எவ்வாறு பகையரசன் முற்றுகை யிட்டிருக்கும்போது வாளா விருக்கக் கூடும்? இயன்றவரை அவன் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு போருக்கெழுந்தான். அந்நிலையில் அவன் திரட்டிய படையைப் பெரும்படை என்றே கூறவேண்டும். விமலாதித்தன் படையுடன் வீரமுரசு இயம்பப் பகைவரைத் தாக்கினன். இராஜேந்திரனுக்கு விமலாதித்தன் படை மிகவும் அற்பமாகத் தோற்றியது. இருவர் படைகளும் கலந்தன. போரும் மூண்டது. இருதிறத்தாரும் தத்தம் வலிமையைத் தோற்றுவித்தார்கள். விமலாதித்தன் வீரர்களுக்கு ஊக்கமூட்டி மறப்பண்பை மிகுவித்துப் போர் புரியுமாறு செய்தான். என்செயினும் என்னே! சோழன் படை ஆரவாரித்து எங்கும் சூழ்ந்திருப்பதை விமலாதித்தன் கண்டான். அவன் கண்களில் தீப்பொறி பறந்தது. நாசியிலும் புகை தோன்றிற்று. நெற்றிமுற்றும் சென்று பரந்தன கண்ணிமைகள். பற்களை நறநறவெனக் கடித்தான். கோபச் சிரிப்பும் தோன்றிற்று. விமலாதித்தன் படைவீரர்களுக்குக் கோபத்தை யூட்டித் தானும் போர்முனையில் சிங்கக் குருளைபோல் நின்று போரிடரியலானன் இராஜேந்திரன். அவனது மனோதிடத்தையும், அஞ்சாமையையும், போர்புரியும் ஆற்றலையும் வீரட்டகாசத்தையும் கண்டு மகிழ்ந்தான். 'பாம்பின்கால் பாம்பறியும்'. விமலா

தித்தனும் இராஜேந்திரனும் நெடுங்காலம் போர் புரிந்தனர். முடிவில் இராஜேந்திரன் விமலாதித்தனைச் சிறைப்படுத்தினன். வேங்கை நாடு இராஜேந்திரனல் கடும்போரில் எளிதில் பிடிக்கப்பட்டது. இராஜேந்திரன், தான் பிடித்த வேங்கை நாட்டிற்குத் தகுந்த பிரதிநிதி ஒருவனை அங்கிருத்தி ஒழுங்கு படுத்திவிட்டு விமலாதித்தனுடன் தன் நாட்டிற்குத் திரும்பினன். அவ்வளவில் வேங்கை நாட்டின் உட்கலகங்கள் யாவும் அடங்கின. அவன் வெற்றிக் கறிகுறியாக மஹேந்திர பர்வதத்தில் ஜயஸ்தம்பம் ஒன்றை நாட்டினன்.

இராஜேந்திரன் வேங்கை நாட்டில் கிடைத்த பெரும் பொருள்களை எடுத்துக்கொண்டு தஞ்சாவூர் வந்தடைந்தான். இராஜராஜன் அப்பொழுது தன் படை எழுச்சியை முடித்துக்கொண்டு தஞ்சாவூர் வந்து சேர்ந்தனன். விமலாதித்தனைச் சிறைப்பிடித்துக்கொண்டு வாகை மாலை சூடி வெற்றியுடன் வந்த இராஜேந்திரனை இராஜ ராஜன் புகழ்ந்து கொண்டாடினன் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அளவு கடந்த அன்பும் களிப்பும் இராஜ ராஜனுக்கு உண்டாயிற்று. விமலாதித்தன் தஞ்சாவூரில் சிறைப்படுத்தப்பட்டான். விமலாதித்தன் இருபத்துமூன்று ஆண்டுகள்வரைத் தஞ்சாவூரில் சிறைப்பட்டிருந்தான். இராஜ ராஜன் மகளாகிய குந்தவை அவனை ஒருமுறை கண்டு கணவனாகத் தெரிந்தெடுத்தனள். அவள் தன் தந்தையிடம் பிடிவாதமாக அவனை விடுத்துத் தன்னை அவனுக்கு மணம் புரிந்து கொடுக்குமாறு வேண்டினள். இராஜ ராஜன் குந்தவையின் வேண்டுகோளை மறுத்தற்கியலாதவனனன். முடிவில் இராஜ-ராஜன் குந்தவையை

விமலாதித்தனுக்கு மணம் புரிந்து கொடுத்தான். வேங்கை நாடு அவனுக்கே அளிக்கப்பட்டது. இராஜ ராஜன் விமலாதித்தனுக்குச் சீரும் சிறப்பும் அளித்துக் குந்தவையோடு அனுப்பினான். விமலாதித்தன் மீண்டும் அரசனானான். குந்தவை ஓர் ஆண் மகவை ஈன்றாள். அம்மகவிற்கு இராஜ ராஜன் என்று பெயரிடப்பட்டது. சளுக்கிய விமலாதித்தன் மகன் ஆதலால் சளுக்கிய இராச ராசன் என்று அவனைப் பின்னுள்ளோர் கூறுவாராயினர்.

இராஜ ராஜன் கி. பி. 1012-ல் இறந்தான். அவன் இறந்தது கேட்டு வருந்தாதார் ஒருவருமில்லை. அரசராயினும் வாழ்நாள் முடிந்தால் இறந்தே தீரவேண்டுமன்றோ? இராஜேந்திரனும் குந்தவையும், பெரிதும் வருந்தினர். இராஜ ராஜன் இறந்த சின்னாளில் அவன் மனைவிமார்களும் பிரிவாற்றாமையால் வருந்தி மண்ணுலக வாழ்க்கையை நீத்தனர். குந்தவை தந்தை தாயர்களது உருவங்களைக் கல்லிற் செய்வித்துத் தஞ்சை ராஜராஜப் பெரும்பள்ளியில் அமைத்துப் பூசை முதலியனவற்றிற்கும் வேண்டுவன அளித்தாள்.

2. படை எழுச்சி

இராஜராஜனுக்குப் பின் இராஜேந்திரன் அரசனுனன். அவன் கி.பி. 1012-ல் அரியணைமீது அமர்ந்தான். தந்தையைப்போல் அறிவும் ஆற்றலும் உடையவன் இராஜேந்திரன். ஆதலின் அவனைக் குடிகள் அனைவரும் புகழ்ந்து கொண்டாடினர். அவன் **பரகேஸரி** என்னும் பட்டம் பெற்முன். சோழவரசர்கள் இராஜகேஸரி, பரகேசரி என்னும் பட்டம் வைத்துக் கொள்வதுண்டு. பரகேசரி இராஜேந்திர சோழன் இளமைப் பருவத்தில் மேதக்க ஆசானிடம் ஒப்புவிக்கப்பட்டுச் செம்மையாகக் கல்வி பயின்றிருந்தான். புலவர் அனைவரும் புகழ்ந்து கொண்டாடத்தகும் கல்வியறிவை அவன் பெற்றிருந்தான். அதனுல் அவனை அனைவரும் **பண்டித சோழன்** என்று சிறப்பித்துக் கூறுவாராஞர். அவன் கவிகள் சமைத்தலினும் சிறப்புற்றிருந்தான். அஞ்சாமையும் ஆற்றலும், அறிவும் அவனிடம் பொருந்தி யிருந்ததற்கு ஏற்ப ஈகையும், ஊக்கமும் அவனிடம் நிலைத்திருந்தன. ஓர் அரசனுக்கு அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இந்நான்கு தன்மைகளும் சிறிதும் குறைவுபடாமல் பொருந்தி யிருத்தல் வேண்டும்.

"அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் என்றிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

இராஜேந்திரசோழன், தன்னிடம் இல்லை என்று வேண்டிவந்தவர்கட்கு அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்துவந்தான். அவன் கல்வியறிவு நிரம்பப் பெற்றவன் ஆதலின் ஒழுக்க நெறியிலும் அரசியல் நெறியிலும் அணுவளவும் பிழைபடாது ஒழுகி வந்தான். உண்மை, பொறை, முதலிய நற்குணங்கள் அவனிடம் இயல்பாகவே பொருந்தியிருந்தன. ஆதலால் அவனை எல்லோரும் **உத்தம சோழன்** என்றும் அழைப்பாராஞர். அவனுக்கு **மதுராந்தகன், விக்கிரம சோழன், முடிகோண்ட சோழன்** என்ற வேறுபெயர்களும் வழங்கி வந்தன.

இராஜேந்திரன் அரியணை ஏறியது முதல் சில ஆண்டுகள்வரை அரசியல்முறைகளைச் சீர்திருத்தினன். வேளாண்மையைப் போற்றும் இயல்பினன் அவன். ஆதலின் அவன் வேளாண்மைக்கு முக்கிய சாதனமாகிய நீர்நிலைகளை உண்டாக்கினன். காவிரியினின்றும் பிரிந்துவரும் முடிகொண்டான் என்னும் கிளைநதி அவனால் உண்டாக்கப்பட்டதே ஆகும்.

இராஜேந்திரன் சிம்மாஸனம் ஏறிய காலத்தில் தஞ்சைமாநகரம் தலைநகரமாக விளங்கிற்று. தந்தையைப்போல் தானும் சோழநாட்டை விசாலப்படுத்த எண்ணினன் இராஜேந்திரன். அதனால் அவன் படைகளைத் திரட்டவேண்டியவனானன். அம்முயற்சியில் அவன் நீண்டகாலம் கழிக்கவில்லை. எளிதில், குறுகிய காலத்தில் அவன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டான். கி.பி. 1012-முதல் கி. பி. 1018 வரை அவன் தஞ்சையிலிருந்து அரசியல் முறையை சேர்படுத்திக்கொண்டான். பின், அவன் பிறநாடுகளின்மீது படை எடுத்துச் சென்றான்.

மைசூரைச் சார்ந்த இடைதுறை நாட்டின்மீது இராஜேந்திரன் முதன் முதல் படையெடுத்துச் சென்ருன். இடைதுறை நாட்டுமன்னன் திரண்ட படையுடன் வந்து எதிர்த்துப் போர்புரிந்தனன். போர் நீண்ட நாட்கள்வரை நடந்தது. முடிவில் இராஜேந்திர சோழன் வெற்றிபெற்ருன். அந்நாடு கைப்பட்டதும் இராஜேந்திரனுக்கு ஊக்கமும், உழைப்பும், உவகையும் மிக்கன. அவன், வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக்கடகம் என்பனவற்றையும் சில நாளில் பிடித்துக்கொண்டான். இடதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக்கடகம், என்னும் நாடுகளின் அரசர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து கப்பம் கட்டுதற்கு இசைந்தனர். அதனுல் இராஜேந்திரன் அங்கங்குப் பிரதிநிதிகளை இருத்திவிட்டு வெற்றியுடன் தன் நாடு நோக்கித் திரும்பினுன்.

மேற்குக் கடற்கரை வழியே அவன் வரவேண்டியதாயிற்று. அப்பொழுது அவன் மலைநாடாகிய சேர நாட்டையும் பிடித்துக்கொண்டான்; பின் மலைநாடு கடந்து தெற்கே சென்ருன். பாண்டிய நாட்டையும் எதிர்த்துப் போர்புரிந்து கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாகியது. இராஜராஜ சோழன் சேர பாண்டிய நாடுகளை ஜயித்துச் சேர சோழ பாண்டி நாடுகளுக்கு அரசனுக விளங்கினுனன்ருே? அதேபோல் அவன் மைந்தனை இராஜேந்திர சோழனும் விரும்பியது நியாயமே. இராஜேந்திரன் படைகளுடன் மலைநாட்டைக் கடந்து சென்று பாண்டியநாட்டை முற்றுகையிட்டான். பாண்டியன், இராஜராஜன் இறந்ததும் தனக்குத்

தானே சுயேச்சை யடைந்துவிட்டதாக எண்ணி மனச் சந்தோஷமுற்றிருந்தான். அந்நிலையில் இராஜேந்திரன் முற்றுகை இட்டது பாண்டியனுக்குத் திகைப்பை யுண்டாக்கியது. இடைதுறை நாடு, வனவாசி, முதலியவைகளையும், மலைநாட்டையும் இராஜேந்திரன் வென்று தன்னகப்படுத்திக்கொண்டு வந்துள்ளான் என்பதைப் பாண்டியன் அறிந்தான். வெற்றிக்கு மேல் வெற்றியாக வீரத்தோடு சினங்கொண்டு எதிர்த்து நிற்கும் சோழன் படையை எவ்வாறு முறியடிப்பது என்று பாண்டியன் சிந்தித்தான். இராஜேந்திரனே பாண்டியனுக்குச் சிந்திக்கவும் காலம் கொடுக்கவில்லை. இராஜேந்திரன் படைகள் ஆரவாரித்தெழுந்து தலைநகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக்கொள்ளத் தருணம் பார்த்திருந்தன. அந்நிலையில் பாண்டியன் சேனைகளோடு எழுந்து தாக்காது இருக்கமுடியவில்லை. பாண்டியனும் படையைத் திரட்டிக்கொண்டு போருக்கு எழுந்தான்.

பாண்டியன் சேனைகளும் சோழன் சேனைகளும் எதிர்த்து நின்றன. போரும் தொடங்கிற்று. எங்கும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. யானைகளும் குதிரைகளும், தலையற்றுக் காலற்று நிலத்தில் மலைகள்போல் வீழ்ந்து இறந்தன. இரத்த வெள்ளம் ஆறு என்னும்படி ஓடிற்று. எங்கும் வில், வாள், வேல், கேடயம் என்னும் ஆயுதப் பயிர்சியே காணப்பட்டது. உயுத்தம் மிகவும் கோரமா யிருந்தது. இராம ராவண யுத்தமோ, பாரதப் போரோ என்று கண்டார் கூறும் தன்மைத்தாக விருந்தது அப்போர். பாண்டியனும் சோழனும் ஊக்கமும் உறுதியும் கொண்டு அஞ்சாது போர் புரிந்தனர்.

முடிவில் சோழன் வெற்றிபெற்ருன் ; பாண்டியன் தோல்வியுற்ருன். பாண்டியன் நாடும் இராஜேந்திரன் ஆட்சியின்கீழ் அமைந்தது. பாண்டியன் வேறு வழியின்றி இராஜேந்திரனுக்குக் கீழ்ச் சிற்றரசனுக விருந்து கப்பங்கட்டி வருவதாக ஒப்புக்கொண்டான். இராஜேந்திரன் பாண்டிய நாட்டில் சில நாட்கள்வரையிலும் தங்கியிருந்து யாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டுத் தன் நாடு நோக்கிப் பிரயாணமானுன். ஆனுல் அவன் மனம் அத்துடன் திருப்தியடையவில்லே. இக் காலத்தில் இலங்கை என்று கூறப்படும் தேசம் அக் காலத்தில் ஈழமண்டலம் என்று பெயர்பெற்றிருந்தது. அதனேயும் இராஜேந்திரன் கைப்பற்றிக்கொள்ள எண்ணினுன். அதனுல் இலங்கையுட்படத் தமிழகம் முழுவதும் தன் ஆட்சியின் கீழ்த் தங்கும் என்று அவன் நினேத்தான். அதனுல் அவன் பாண்டிநாட்டில் பிரதிநிதி ஒருவனே வைத்துவிட்டுப் படைகளுடன், ஈழநாட்டை நோக்கிச் சென்ருன்.

ஈழ மண்டலம் என்று சொல்லப்படுவது தற்காலத்தில் இலங்கை என்று பெயர் பெற்று விளங்குகின்றது. அது மிகவும் செழிப்பான பூபாகம். அது நான்கு பக்கங்களிலும் நீரால் சூழ்ந்திருப்பதால் அது ஒரு அழகிய தீவு என்று கூறப்படும். இலங்கைத்தீவை இராமாயணகாலத்தில் இராவணன் என்ற வலிமை பெற்ற அரசன் ஆண்டுவந்தான். ஆகவே, இலங்கைத் தீவு நெடுங்காலமாகவே உள்ளது. பழந்தமிழ்நூற்களில் இலங்கைத் தீவிற்கும் இந்தியாவிற்கும் நிலச் சம்பந்தம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்தியாவின் தெற்கெல்லே கன்னியா குமரி முனே அல்லவா?

கன்னியா குமரியை மலை என்றும், ஆறு என்றும், கடல் என்றும் நூல்கள் கூறும். இப்பொழுது கன்னியா குமரி முனை கடல் என்பதை வெளிப் படையாக எல்லோரும் அறிவர். சுமார் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் தென் பாகத்தைக் கடல் பொங்கிக் கவர்ந்துகொண்டது. ஒருகாலத்தில் நிலமாக விருந்த பாகம் மற்றொரு காலத்தில் நீராக மாறுவது இயற்கையே. அவ்வாறு கடல் கொண்டதைக் கடற்கோள் என்று பழந் தமிழ் நூல்கள் கூறும். இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் கடல் கொண்டதுபோல் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நிலப்பாகத் தைக் கடல் கொண்டது. அதுவே முதற் கடல் கோள். முதற்கடற்கோளுக்கு முன் இப்பொழு திருக்கும் கன்னியாகுமரிக்குத் தெற்கில் நாற்பத் தொன்பது நாடுகள் இருந்தன. ஆதலால் அக்காலத் தில் இலங்கை இந்தியாவோடு நிலச்சம்பந்த முற் றிருக்க வேண்டும். பின், இரண்டாவது கடற்கோ ளால் விடுபட்டுத் தீவாகி யிருத்தல் வேண்டும்.

இலங்கைத்தீவு பழங்காலம் தொட்டே வலிமை மிக்க அரசர்களால் ஆளப்பட்டுவந்தது. அத்தீவை யும் அதனைச் சார்ந்த நாடுகளையும் ஈழமண்டலம் என்றழைப்பர் பெரியோர். இராஜேந்திரனுக்கு முன், ஈழமண்டலம் சோழ, பல்லவ, பாண்டியவரசர் களால் பலதடவைகளிலும் துன்புற்றிருந்தது. இரா ஜேந்திர சோழன் தந்தையான இராஜ ராஜ சோழ னும் இலங்கைமீது படைஎடுத்துச் சென்றான்; போர் புரிந்து வெற்றிகொண்டான். அதேபோல் இரா ஜேந்திரனும் படைஎடுத்துச் சென்றான்.

சோழவரசன் படைஎடுத்து வருகின்ருன் என்பதை இலங்கை அரசன் அறிந்தான். அவன், தன் படைகளைத் திரட்டிக்கொண்டு கடல் துறைமுகங்கள் உள்ள விடங்களிலெல்லாம் காவல் புரிந்தான். இராஜேந்திரனிடம் கப்பற் படையும் இருந்தன. இரு திறத்தார் படைகளும் கலந்தன. போரும் மும்முரமாகத் தொடங்கியது. போர் நெடுநாட்கள் வரை நீட்டியாது விரைவில் சோழனுக்கு வெற்றியாக முடிந்தது. இலங்கை அரசன், சோழனுக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டான். மற்றும் அவன் இராஜேந்திரனுக்குத் தன் நாட்டில் கிடைக்கும் அருப்பொருள்களை எல்லாம் கொடுத்து மரியாதை செய்து அனுப்பினன். இராஜேந்திரன், எங்கும் வெற்றி பெற்று வாகை சூடி ஒகையோடு தன் நாடு அடைந்தனன். பண்டைக்காலத்தில் தமிழ் அரசர்கள் போரிற்குச் செல்லும்போது வஞ்சிப்பூ மாலையையும், வெற்றி பெற்றுத் திரும்பும்போது வாகைப்பூ மாலையையும் சூடுதல் வழக்கம். இராஜேந்திரன் படைகொண்டு சென்று பகைவர் வலி அடக்கி வெற்றியுடன் மீண்டதைக் கேட்டுச் சோழநாட்டு மக்கள் அவனைப் போற்றிப் புகழ்வாராயினர். ஆகவே இராஜேந்திரனுடைய வலிமையின் சிறப்பும், புகழும் எங்கும் பரவலாயின.

3. வடநாட்டுப் படை எழுச்சி

இராஜேந்திரன் தஞ்சையை அடைந்ததும் தன் நாட்டின் அரசியல் முறையைக் கவனிக்கலானன். அரசாங்கத்தின் முறையை அவன் இளமைப்பருவத்திலேயே தந்தை யோடிருந்து கவனித்து வந்தவன் ஆதலால் அரசியில் முறையைச் சீர்படுத்துவது அவனுக்கு மிகவும் எளிதாயிற்று. அரசியல் முறைகள் யாவும் அமைவுறச் சீர்த்திருத்திய பின் அவன் வடநாடுநோக்கிச் செல்ல எண்ணினன். அவன், தன் கருத்தை அமைச்சர் முதலாயினேருக்கும் கூறினன். அவர்களும் அவன் கருத்திற்கு இசைந்தார்கள். நிமித்திகன் ஒருவனை அழைத்துப் பிரயாணத்திற்கு நல்ல நாளும் குறிப்பிடப்பட்டது. அந்நாளில் இராஜேந்திரன் குடையையும் வாளையும் வடதிசைப் பெயர்த்து நாட்கோள் விழாக்கொண்டாடினன். நாட்கொள் விழா என்பது அரசர்கள் வெளியே புறப்படுங் காலத்தில் முதலில் நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் வாளையும் குடையையும் வடதிசையிற் கொண்டு போய் வைத்துப் பெருவிழாச் செய்து, பின் தாம் பிரயாணமாவர். 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' என்பது பழமொழி யல்லவா?

இராஜேந்திரன், தன் படைவீரர்களுக்கும், ஆயத்தார்களுக்கும் விருந்து நடத்தினன். பின், அவன் நன்முகூர்த்தத்தில் தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைச் சேனையும் சூழ்ந்துவர வடதிசை

நோக்கிப் பிரயாணமானுன். அமைச்சர்களும், அரசியல் நிர்வாகிகளும் அவனோடு சென்றனர். வந்தியர் அவன் புகழைப் பாடிச் சென்றனர். வந்தியர் என்பார் அரசர் புகழைப்பாடும் ஒருவகைச் சாதியார்.

வடதிசை நோக்கிச் சென்ற இராஜேந்திரன் **இரட்டபாடி** என்னும் நாட்டிற்கு அருகில் வந்தனன். இரட்டபாடி என்னும் நாட்டை அக்காலத்தில் மேல் நாட்டுச் சளுக்கிய அரசன் ஆண்டுவந்தான். அவன் பெயர் **ஜயசிங்கன்** என்பதாகும். அவனுக்கு முன் ஒருவன் ஜயசிங்கன் என்னும் பெயர் தாங்கி அந்நாட்டை ஆண்டிருந்தான். ஆதலால் இராஜேந்திரன் காலத்தில் அந்நாட்டை ஆண்ட ஜயசிங்கனை, இரண்டாம் ஜயசிங்கன் என்றழைப்பாராயினர். ஜயசிங்கன் பெருவலி படைத்தவன். மற்றும் சளுக்கிய வமிசத்தில் வந்தவன். சளுக்கியர் என்பார் க்ஷத்திரிய சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பெருவலி பெற்றவர்கள். சளுக்கியரில் சிறந்த அரசனாக விளங்கிய புலகேசி என்பவனைக் கண்டு ஹர்ஷவர்த்தனன் என்னும் பெருவலி படைத்த வடநாட்டரசனும் அஞ்சியோடினன் என்றால் சளுக்கியரின் வல்லமையைக் கூறவும் வேண்டுமோ?

இரட்டபாடி அரசனாகிய ஜயசிங்கன், சோழன் படையொடு வருதலை அறிந்தான். முன்னமேயே சோழனுடைய வலிமையைக் கேட்டிருந்தான் ஆதலால் அவன் பெருமுயற்சி கொண்டு பெருஞ்சேனையைத் திரட்டலானுன். சோழன் அதற்குள் சேனையோடு வந்து இரட்டபாடியை முற்றுகை யிட்டனன். ஜயசிங்கன் அதனை அறிந்து பெரும்படையொடு

போர் புரிய முன் வந்தான். அவன் நாட்டில் ஒரு பெரிய மலையும் அதனை அடுத்துப் பெருவெளி ஒன்றும் இருந்தது. அதுவே போர் புரிதற்குத் தகுதியான இடமென்று ஜயசிங்கன் தேர்ந்தனன். சேனைகளைக் கொண்டுசென்று அவ்விடத்தே அணிவகுத்து நிறுத்தினன். சோழன் சேனைகளும் செவ்வையாக அணிவகுக்கப்பட்டு அவ்விடத்தே வந்து நின்றன. ஜயசிங்கன் போர்வீரர்களுக்கு ஊக்க மூட்டிக் கடும் போர் புரியுமாறு கட்டளை யிட்டான். போரும் தொடங்கிற்று. இருவர் சேனைகளும் கலந்தன.

இயற்கையில் வீரத் தன்மை மிகுந்த போர் வீரர்கள் போர் நடப்பதைக் கேட்டால் களிப்படைவர். அவர்கள் போரில் தங்கள் வல்லமையைத் தோற்றுவித்துப் புகழ் பெற விரும்புவர். ஆயுதப் பயிற்சியின் பயனை வீரர்கள் போரில்தானே காணவியலும்! சாதாரண மனிதர் ஆயுதங்களைக் கண்டால் நடுங்குவர். அவ்வாயுதங்களால் சிறுகாயம் ஏற்பட்டாலோ துடிதுடித்து உடல் நடுங்குவர். வீரர்களோ அவ்வாயுதங்கள் தம்மீது தாக்குதலையும் கருதார். அவர்கள் அவ்வாயுதங்களின்முன் பாய்ந்தெழுந்து விழுந்து தம் ஆற்றலைத் தோற்றுவிப்பார்கள். அவ்வாயுதங்களினுலுண்டாகிய காய வடுக்களை அலங்காரம் என்று கருதும் இயல்பு அவர்களிடம் உண்டு. ஆதலினுலன்றோ அத்தகைய காயங்களுக்கு 'விழுப்புண்' என்று பெயர்.

போர் மிகவும் மும்முரமாக நடந்தது. ஜயசிங்கன் குதிரையேறித் தன்படைகள் இருக்குமிடந்தோறும் சென்று வீரர்களுக்கு ஊக்க மூட்டி வந்தான்.

அவன் வீரர்கள் அஞ்சா நெஞ்சோடு பகை வீரர் களைத் தாக்கிக் கடும்போர் புரிந்தனர். இராஜேந்திரன் சளுக்கிய வீரர் புரியும் போரின் திறத்தைக் கண்டு வியந்தான். சளுக்கிய வீரரின் உண்மைத் தன்மையும், அஞ்சாமையும், வலிமையும், போர்புரியும் முறையும், அரசபக்தியும், மறப்பண்பும் இராஜேந்திரனுக்கு நன்கு விளங்கிற்று. உண்மையில் இராஜேந்திரன் மகிழ்ந்து சளுக்கிய வீரரைப் பாடி வீட்டில் தன்னுடன் இருப்பாரோடு போற்றிப் புகழ்ந்தான். ஒரு வீரன் திறமையை மற்றொரு வீரன்தானே அறிவான்! பாம்பின் காலைப் பாம்புதானே அறியும்!

ஜயசிங்கனும் இராஜேந்திரனும் **உச்சங்கித்துர்க்கம்** என்னும் மலையை அடுத்த சமவெளியில் போர் புரிந்தனர். அச்சமவெளிக்கு **முயங்கி** என்ற பெயரும் உண்டு. முயங்கியில் நடந்த சோழ சளுக்கியப் போர் சோழர் சரித்திரங்களில் குறிக்கத் தகுந்த போராக விளங்கிற்று. இருதிருத்தாரும் சோர்வின்றி நெடு நாள் வரை போர் புரிந்தனர். இளஞ்சிங்கம் என்று இயம்பத் தகுந்த இராஜேந்திரன் முடிவில் முயங்கிப் போரில் வெற்றிபெற்றான். இராஜேந்திரன் ஜயசிங்கனை வெற்றிகொண்டான் என்றாலும் அவனிடத்தில் இராஜேந்திரனுக்கு மிக்க மரியாதையும் பெருமதிப்பும் உண்டு. அவனது அஞ்சாமையையும், போர் நடத்தும் திறமையையும் வியந்து புகழ்ந்து கூறினான் இராஜேந்திரன்.

கி. பி. 1021-ல் இராஜேந்திரன் ஜயசிம்மனை முயங்கிப் போரில் வென்றான். அவன், இரட்டராச்சியத்தை அவனிடமே கொடுத்துவிட்டான். ஜய

சிம்மன் சோழவரசனுன இராஜேந்திரனுக்குத் திறை செலுத்துவதாக ஒப்புக்கொண்டான். ஆதலால் இராஜேந்திரன் இரட்டராச்சியத்தை அவனையே ஆளும்படி விட்டு விட்டு அவனுல் கொடுக்கப்பட்ட திறைப்பொருளைப் பெற்றுக் கொண்டு சேனைகளோடு அவ்விடத்தினின்றும் புறப்பட்டான்.

4. வடநாட்டு மன்னரை வலியழித்தல்

இரட்டபாடி அரசனை வென்ற இராஜேந்திரன் பின்னும் ஊக்கங்கொண்டு சேனைகளுடன் ஒட்டர தேசம் நோக்கிச் சென்றான் ஒட்டர தேசத்தை இந் திரரதன் என்பவன் அரசாண்டுவந்தான். அவ னிடம் நிறைந்த காலாட்படைகளிருந்தன. இரா ஜேந்திரன் படையுடன் சென்று ஒட்டர தேசத் தரசனைத் தாக்கினன். இந்திர ரதன் பெரும்படை களைத் திரட்டிக்கொண்டு இராஜேந்திரனை எதிர்த் தான். இருவரும் வலிமையில் மிக்கவர். இருவர் சேனைகளும் வீரத்தோடு போர் செய்யக் கோபித் தெழுந்தன. போரும் மூண்டது. கடும்போர் நேரிட்டதேனும் இராஜேந்திரன் சேனை அச்சத்தை யேனும், களைப்பையேனும், ஊக்கக் குறைவையேனும் அடையவில்லை. அதற்கு மாறாகப் புத்தகம் புத் துயிர் பெற்று ஊக்கமும் உற்சாகமுங் கொண்டு, மறப்பண்பு மிகப் போர் புரியலாயிற்று.

முடிவில் போரில்; இராஜேந்திரன் வெற்றிபெற்றான். ஒட்டர தேசத் தரசனான இந்திரரதன் கப்பம் கட்டுவ தாக ஒப்புக் கொண்டனன். இராஜேந்திரன் அவன் கொடுத்த அரும் பெரும் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, கோசலை நாடு, நாமணைக்கோணை, பஞ்சப் பள்ளி, மாசுணி தேசம், சக்கரகோட்டம் முதலான சிறு நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டான். இந்நிலை யில், தக்ஷிண லாட தேசத்தை இரண சூரன் என்பவன்

ஆண்டுவந்தான். அவனிடம் பலவகைச் சேனைகளும் இருந்தன. அவன், இராஜேந்திரன் படை திரட்டி வந்திருப்பதை அறிந்தான். தக்ஷிணத்தரசன் ஒருவன் படையொடு தன் நாட்டைக் கடந்து வந்து வடதேசத்து மன்னர்களைப் போரில் கலக்கி வெற்றி கொண்டு செல்வது அவன் மனத்திற்குப் பொருந்தவில்லை. ஆதலால் இராஜேந்திரனை எதிர்த்துப் பொருது அவன் வலியை அடக்க எண்ணினன் இரணசூரன். உடனே அவன் படைகளைத் திரட்டிக் கொண்டு இராஜேந்திரனை எதிர்த்துவந்து தாக்கினான். இருவருக்கும் கடும்போர் மூண்டது. இருவர் படைவீரர்களும் சலிப்பின்றி யஞ்சா நெஞ்சோடு கடும்போர் விளைத்தனர். நெடுநாள் போர் நடந்தது. இராஜேந்திரனே கண்டு வியக்கும்படி இரணசூரன் கடும் போரில் தன் ஆற்றலைத் தோற்றுவித்தான். வெல்வதும் தோற்பதும் மன்னர்களுக்கு இயல்பானவை. போரில் புகுந்த இருதிறத்தாரும் தனித்தனியே தாம் தாம் வெற்றிபெற வேண்டுமென்று கருதுவர். ஆனால் வெற்றியும் தோல்வியும் ஒருவரிடத்தில் எவ்வாறு பொருந்தும். ஒருவர் வெற்றிகொண்டால் மற்றவர் தோல்வியைத்தானே அடையக்கூடும். இரணசூரன் போரில் வெற்றி பெறுதற்குரிய பல துறைகளிலும் உழைத்தான் என்றாலும்; முடிவில் இராஜேந்திரனே வெற்றி பெற்றான். இராஜேந்திரன் இரணசூரனை மிக்க மரியாதையுடன் நடத்தினான். அவனது போர்த் திறனைக் கண்டு வியந்தான். இரணசூரன் இராஜேந்திரனைப் பணிந்து கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டான். அவன் அரிய பொருள்களை இரா

ஜேந்திரனுக்கு அளித்தனன். அவற்றைப் பெற்றுக் கொண்ட இராஜேந்திரன் சேனைகளோடு வடநாடு நோக்கிச் செல்வானாயினன்.

இராஜேந்திரன் படைகளோடு ஒரு பெரிய ஆற்றங் கரையை அடைந்தனன். அவ்வாற்றில் நீர் தெளிந்து தண்ணென்று ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் இரு கரை மருங்கிலும் வானுற ஓங்கி வளர்ந்த மரங்களும் புட்பச் செடிகளும், கொடிகளும், புல் புதர்களும் நிறைந்து காண்பதற்கு விருந்தெனத் திகழ்ந்தன. எங்கும் பச்சைப் பசேல் என்று விளங்கிடும் காட்சி எத்தகையார் மனத்தையும் இன்புறுத்துவதாகும்.

இயற்கை வளம் நிறைந்த அவ்விடத்தை இராஜேந் திரன் அடைந்ததும் வீரர்களைக் கூடாரம் அடித்து அங்குத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யும்படி கட் டளையிட்டான். இராஜேந்திரன் கல்வி கேள்விகளில் நிரம்பக் கற்றுக் கேட்டுத் தேர்ச்சி பெற்றிருந்தான். தமிழ்மொழியினிடத்து அவன் வைத்திருந்த காதல் அளவு கடந்தது. தமிழ் நூற்களை ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றமும் அறக் கற்றிருந் தான். தமிழ் இலக்கண இலக்கியங்களில் அவனுக்கு நிறைந்த புலமை உண்டு. அவன் கவிகள் பாடுதலி னும் சிறந்தோனாய் விளங்கினான். நீதி நூற்கள் பல வற்றையும் கற்று அவைகளில் கூறப்படும் நன்னெறி யில் அணுவளவும் பிசகாது அவன் ஒழுகிவந்தான். ஆதலால் அனைவரும் அவனை, “பண்டிதசோழன்” “உத்தம சோழன்” என்னும் சிறப்புப் பெயர்களால் அழைப்பாராயினர். தமிழ்மொழியில் கூறப்பட்டி ருந்த நால் நிலம், ஐந்திணைகளை அவன் செவ்வையாய்

உணர்ந்திருந்தான். பண்டைக்காலத்துக் கவிஞர்கள் இயற்கை யழகைப் புலப்படுத்துவதில் மிகவும் சிறந்தோர்கள். அவர்கள் அங்ஙனம் கூறும் பொழுது ஒன்றையும் தம் கல்வித்திறத்தால் புனைந்து கூறமாட்டார்கள்; உள்ளதை உள்ளவாறே கூறி இயற்கை யழகைச் சுவைப்படப் புலப்படுத்தும் இயல்பு வாய்ந்தவர்கள். அன்னார் கவிகள் படிக்குந்தோறும் பல்வேறு பொருள்தந்து தேனினும் தித்திக்கும். அத்தகைய கவிகளை இராஜேந்திரன் பன்முறை ஓதிச் சுவைத்து இன்புற்றிருந்தான். ஆதலின் இயற்கை வளம் நிரம்பிய அப்பேராற்றங் கரையில் அவன் தங்கியிருக்க விழைந்தான். கட்டளைப்படி கூடாரங்கள் அடிக்கப்பட்டன. எல்லோரும் அவற்றில் தங்கினர். பலவிடங்களிலும் போர் புரிந்து சோர்வுற்றிருந்த படைவீரர்களுக்கு இராஜேந்திரன் அவ்விடத்தில் தங்கியது மிக்க சந்தோஷமாயிற்று. வீரர்கள் யதேச்சையாக ஓடியாடித் திரிந்து நல்லுணவு உண்டு மகிழ்ந்திருந்தனர். இராஜேந்திரன் இரண்டு மூன்று நாட்கள்வரைக் கவலையின்றிக் கூடாரத்தில் தங்கியிருந்தனன்.

சில நாட்கள்வரை இராஜேந்திரன், தன் உடல் நிலை கருதிப் பிறிதொன்றையும் நினைக்காது உல்லாசமாகக் காலம் கழித்தான். மாலை வேளையிலும் காலை வேளையிலும் அவன் ஆற்றோரமாகச் சிறிது தூரம் உலவி வருவது வழக்கம். அக்காலத்தில் அவன், இயற்கையின் எழிலை நன்கு கவனித்து இன்புறுவான். அவ்வப்போது அவன் மனத்தில் உதிக்கும் தோற்றங்கள் பலவே. இயற்கைவளம் அவனுக்குப் பல உண்மை நீதிகளைப் புகட்டியது.

ஒருநாள் இராஜேந்திரன் அறிவிற் சிறந்த அமைச்சரும், தளகர்த்தர்களும் புடைசூழ்ந்துவர ஆற்றங்கரையை அடைந்தான். எல்லோரும் ஆற்றோரமாக நடந்து சென்றுகொண் டிருக்கையில் ஆற்றின் நடுவில் ஒரு திட்டு தோன்றியது. அத்திட்டின் மணல் வெண்மையாகப் பரந்திருந்தது. நாற்புறமும் நீர் சூழ்ந்திருக்கும் அத்திட்டிற்குச் சென்று அமர்ந்து இருக்க இராஜேந்திரன் விரும்பினன். படகுகள் கொண்டு வரப்பட்டன. எல்லோரும் படகுகளில் ஏறிக்கொண்டனர். படகுகள் திட்டைச் சார்ந்தன; அனைவரும் இறங்கித் திட்டில் மணற் பரப்பில் அமர்ந்தனர். இராஜேந்திரன் இயற்கையில் ஈடுபட்டுச் சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் மனத்தில் உதித்த எண்ணங்கள் பல. அதனை அறிந்த பக்கத்தில் இருந்த ஓர் அமைச்சன் எழுந்து, "மன்னவ, இதுவரை நாம் படை எடுத்து வந்ததில் எவ்விடத்தும் வெற்றிமேல் வெற்றியே உண்டாகிக்கொண்டிருக்கின்றன. சோழர் குல திலகமே! உனக்கும் உன் குலத்தோருக்கும் தோல்வி என்பது உண்டாகுமோ? மன்னவ, நீ; நின் தந்தைபோல் பல்வேறு நாடுகளுக்கும் சென்று போர் புரிந்து வெற்றிகொண்டு, புகழ் பரப்பி வருகின்றாய். நின் புகழ் ஒளி எங்கும் பரந்து வீசுகின்றது. காவல! நாம் நம் நாட்டை விட்டுப் பல மாதங்கள் ஆயின. வெகுதூரம் வந்துவிட்டோம். கங்கைப் பேராறு நமக்கு அதிகச் சமீபத்திலேயே உள்ளது. நாம் கங்கை போய் நீராடிச் செல்வது தகுதியுடையதல்லவா?" என்றான். அப்பொழுது மற்றொருவன்

எழுந்து, " மன்ன, நாம் இடத்திற்குச் சற்று வடக்கே வங்காளம் என்று ஒரு தேசம் உள்ளது. அதனைக் கோவிந்த சந்திரன் என்பவன் ஆண்டுவருகின்றான். அவன் கொடுந்தன்மைகள் நிறைந்தவன் என்று கேள்விப்பட்டேன். அவன் வலி யடக்கிச் செல்லுதல் நல்லதாகும் " என்று கூறினன். அப்பொழுது அங்கிருந்த தளகர்த்தன் எழுந்து, " அரசே, வங்காளத்தை யடுத்த உத்திரலாடத்தை மகிபாலன் என்பான் ஆட்சிபுரிந்து வருகின்றனன். அவன் வலி மிகவுடையவனாக வெண்ணித் தருக்கித் திரிகின்றனன். அவன் வலியை அழித்து நாம் அடக்கிச் செல்லவேண்டும் " என்றான்.

அவ்வாறே செய்வதெனத் தீர்மானித்து இராஜேந்திரன் படையொடு கங்கைவரைச் சென்று மீள்வதாக உறுதி கூறினன். அமைச்சரும் மற்றுள்ளோரும் அது கேட்டு மகிழ்ந்தனர். சிறிது நேரம் அனைவரும் பேசிக்கொண்டிருந்தனர். ஆற்றின் மேற்குத் திசையில், நீல மலைமீது சிவந்த பொன்னிறம் படைத்த கதிரவனுடைய வட்ட வடிவம் தோன்றிற்று. எங்கும் பொன்னொளி பரந்து வீசியது. மலையும், ஆற்றின் நீரும் காண்பார் கண்களுக்கு விருந்தெனத் திகழ்ந்தன. சிறிது நேரம் கழிந்ததும் கதிரவன் மேற்குக் கடலில் குளித்தான். இருள் சூழ வாரம்பித்தது. அனைவரும் படகுகளில் ஏறிக் கரைசேர்ந்து கூடாரத்தை நண்ணினர். பால்போல் வெண்ணிலவும் பரந்து வீசியது.

5. வங்காளம்

மறுநாட் பொழுது புலர்ந்ததும் இராஜேந்திரன் படை வீரர்கள் சூழ்ந்துவர வங்காளம் நோக்கிப் புறப் பட்டான். சேனுவீரர்கள் ஆரவாரத்தோடு பிரயாண மாயினர். பல்வகை வாத்தியங்களின் ஒலி எழுகடல் ஒலியையும் அடக்கி எழுந்தது. வெற்றியின் மேல் வெற்றியாக, வீரலக்ஷ்மி பொருந்தி விளங்கும் இரா ஜேந்திரன் புறப்பாடு தேவர்களுக்கு அரசனை இந்தி ரன் புறப்பாட்டை ஒத்திருந்தது என்னலாம். படை கள் யாவும் வங்காளம் நோக்கிச் சென்றன.

வங்காளம் நீர்வளம் மிக்க தேசம். கங்காநதியின் பெருக்கால் அந்நாடு செழித்து விளங்குவதாகும். பிரம்மபுத்திரா, ஹூக்கிளி என்ற நதிகளும், பல சிற் ருறுகளும் அந்நாட்டிற் பரந்து பாய்கின்றன. நீர் வளப்பமும், நிலச்செழுமையும் பொருந்திய அந்த நாடு அக்காலத்தும், இக்காலத்தும் சிறந்து விளங்குவ தாகும். அந்நாட்டு மக்கள் இயற்கையாகவே உடல் வலிபெற்றவர்கள். மற்றும் அவர்கள் தேசப்பற்று மிகுந்தவர்கள், இந்தியாவில் மிகச் சிறந்ததாக அன் றும் இன்றும் கருதப்படும் தேசம் அவ்வங்காள தேசமே. அதனலன்றே ஆரியர்களும், முகமதியர் களும், பிறரும் இந்தியாவில் புகுந்த காலங்களில் வங் காளத்தையே முதன் முதலில் கைப்பற்றுவராயினர். செல்வம் நிறைந்த அத்தேசத்தை யார்தான் கைப் பற்ற நினையாதிருப்பர்? அத்தேசத்தில் சமுத்திரக்

கரையும், ஆழமுள்ள ஆறுகளும் இருப்பதால் வர்த்தகத்திற்கும் அத்தேசம் சிறந்ததாகவுள்ளது. ஆதலின் வர்த்தகர்கள் அத்தேசத்தில் விரும்பிக் குடியேறினர். வர்த்தகர்கள் தங்கள் பொருள்களைப் படகில் வைத்துக்கொண்டு உள்நாடுகளுக்குக்குக் கொண்டு போய் வர்த்தகம் செய்வர். ஆதலின், அத்தேசத்தில் வர்த்தகமும், வேளாண்மையும் சிறப்புற நடைபெறுவதாயிற்று. அதனால் குடிகள் துன்பமின்றிச் செல்வத்திற் சிறந்து விளங்கினர். மற்றும் அத்தேசத்தில் பல்வேறு தேசத்து மக்களும் வந்து வசித்தனர். சுருங்கச் சொல்லின் வங்காளதேசம் உலகிற்கே ஓர் பொக்கிஷ சாலையாக விளங்கிற்று என்னலாம். அத்தகைய தேசத்தைக் **கோவிந்த சந்திரன்** என்பவன் ஆண்டு வந்தான். அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். அவனிடம் வலிமை மிக்க நிலப் படையும், கப்பற் படையும் இருந்தன. அதனால் அவன் செருக்குற்றிருந்தான். அதற்கு ஏற்ப அக்காலத்தில் அவனை எதிர்ப்பார் ஒருவரும் வடநாட்டில் இல்லை. அதனை அவன் நன்குணர்ந்திருந்தான். அந்நிலையில் அவன் செருக்குற்றிருப்பது நியாயந்தானே ?

சோழன் வங்காளத்தைக் குறுகலானான். ஒரு தூதனை முதலில் கோவிந்தசந்திரனிடம் இராஜேந்திரன் அனுப்பினான். தூதன் கோவிந்தசந்திரனை அடைந்து, "அரசே, எம்மன்னன் இராஜேந்திரன் பல வரசர்களை வெற்றிகொண்ட விறலோன். அவன் இப்பொழுது படையொடு உன் நாட்டை அடுத்து வந்துள்ளான். அவன் கங்கைப் பேராறு நோக்கிச் செல்கின்றான். அவனைப் பணிவாயாக" என்றனன்.

தூதன் மொழி கேட்ட கோவிந்தசந்திரன் முகம் சிவப்ப, பற்களை நறநறவெனக் கடித்து, உருத்து நோக்கிக், கொதித்து எழுந்தான். மீசை துடித்தது. புருவங்கள் நெறிந்து மேல் நோக்கி எழுந்தன. கண்களில் தீப்பொறி பறந்தது. மூக்கில் புகை தோன்றியது. உடைவாளைக் கை சென்று பற்றியது. உதடுகள் துடித்தன. கோபச் சிரிப்பும் உண்டாயிற்று. அடங்காச் சினம் பொங்கி எழ, மன்னன் அரியாசனத்தை விட்டு எழுந்தான்; தூதனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தான். அச்சமயத்தில் அங்கிருந்த மெய்க்காவலர் நடுநடுங்கி அஞ்சி நின்றனர். மன்னன் தூதனை நோக்கி, "தூத, நீ என் வலியறியாது கூறிவிட்டாய். நீ தூதன்; என் முன் இவ்வாறு கூறிய உன்னை இவ்வாளுக்கே இரையாக்கியிருப்பேன். ஆனால் தூதனாக வந்த உன்னைக் கொல்லுதல் தகாது என்று நிற்கின்றேன். என்னைக் கண்டு அஞ்சி வடநாட்டு மன்னர் எல்லோரும் ஒடுங்கி என் ஏவல் கேட்டு நிற்பதை நீ யறியாய். தென்தேசத்தில் வாழும் உம் மன்னன் என்னிலும் வலியனோ? வலியனாயின் என்னை வென்றே அவன் சேனைகளோடு என் நாட்டில் பிரவேசிக்கக் கடவன். ஆதலின், தூத, நீ சென்று உன் அரசனிடம் நான் போருக்கு அழைத்ததாகக் கூறு" என்று வெகுண்டு சொன்னான். தூதன் அத்தகைய பதிலை எதிர்பார்த்தவனே ஆதலின் விரைந்து சென்று இராஜேந்திரனிடம் யாவற்றையும் கூறினன். இராஜேந்திரன் உடனே தன் சேனைகளைச் சித்தப்படுத்திக்கொண்டு வங்காள நாட்டு அரசனோடு சண்டை செய்யப் புறப்பட்டான்.

சேனைகள் ஆரவாரித்து எழுந்து சென்றன. இராஜேந்திரன் விரைந்து வங்காள நாட்டிற்குட் புகுந்து அந்நாட்டுத் தலைநகரை முற்றுகை யிட்டான். கோவிந்தசந்திரன், படைகளைத் திரட்டிக் கொண்டு கோட்டைக்கு வெளியே வந்தான். இருதிறத்தார் படைகளும் ஒரு பரந்த வெளியில் கலந்தன. போர் மூண்டது. வாளொடு வாளும் தோளொடு தோளுமாக இருபக்கத்தாரும் வெகுண்டெழுந்து சண்டையிட்டனர். இரத்த வெள்ளம் ஆறும் என்னும்படி ஓடிற்று. மலைகள்போல் பிணக் குவியல்கள் குவிந்தன. ஆகாய வெளியில் பருந்துகளும் கழுகுகளும் வட்டமிட்டன. போர் மிகக் கடுமையாக இருந்தது. தென்னாட்டு அரசன் இத்தகைய கடும்போர் புரியும் ஆற்றல் உடையவன் என்று கோவிந்தசந்திரன் கனவிலும் கருதவில்லை. தன் சேனைகள் சோழன் சேனைகளை எதிர்த்துப் போர் புரியமாட்டாது அங்கு மிங்கும் ஓடி அலங்குலைதலைக் கண்ட அப்பொழுதேதான் சோழன் வலிமையைக் கோவிந்தசந்திரன் நன்கறிந்து கொண்டான். தான் அடையப்போவது தோல்வியே என்பதை அவன் உணர்ந்தான். போரை நிறுத்திச் சோழனோடு நட்புக்கொள்ளவும் எண்ணங்கொண்டான். ஆனால் வடநாட்டு மன்னர்கள் பிறர் தன்னை எள்ளி நகையாடுவரே என்று வருந்தினன்.

இராஜேந்திரன் குதிரைமீது ஏறிக்கொண்டு, பகைவர்களை எதிர்த்துச் சேனைகள் நிற்கும் இடந்தோறும் சென்று வீரமொழிகள் பல கூறி வீரர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிக் கடும் போர் புரியுமாறு தூண்டினன். வீரர்களோ சலிப்பின்றிப் போர் புரிந்த

னர். நெடுங்காலம்வரையில் கோவிந்தசந்திரன் இராஜேந்திரனை எதிர்த்து நின்முன் எனினும் படைவலி குன்றியதால் எதிர் ஊன்றி நிற்கமாட்டாது சோழ மன்னனுல் சிறைப்பிடிக்கப்பட்டான். வங்காளம் இராஜேந்திரன் கையகமாயிற்று. இராஜேந்திரன் அங்குத் தொல்குல அமைச்சர்களில் ஒருவனை அமர்த்திவிட்டுக் கோவிந்த சந்திரனையும் சிறை கொண்டு ஹூக்ளி நதிக்கரையில் சிலநாள் கூடார மடித்துத் தங்கினுன். இராஜேந்திரன், கோவிந்த சந்திரனை வெற்றிகொண்ட செய்தி வடநாடெங்கும் காட்டுத் தீயேபோல் பரவிற்று. வடநாட்டு மன்னர் பல்லோர் பெறலரும் பொருள்களைக் கொடுத்து அவனேடு நட்புக்கொண்டனர்.

6. கங்கைநீர் கொணர்தல்

வங்காளத்தைக் கைப்பற்றிக்கொண்ட இராஜேந்திரன் கங்கை நீராடற் பொருட்டுப் பிரயாணமானுன். **உத்திரலாடத் தரசனுன மகிபாலன்** என்பவன் இராஜேந்திரன் வருகையைப் பற்றிக் கேள்விப்பட்டான். கோவிந்த சந்திரனைப் போரில் வென்றதினுல் கொண்ட பெருவலி படைத்தவன் இராஜேந்திரன் என்பதை அவன் அறிவான். ஆனுல் ஒரு தக்ஷிண தேசத்து அரசன் தன் நாட்டைவிட்டுப் பல நூற்றுக் கணக்கான மைல்கள் வடக்கே வந்து, வடநாட்டு அரசர்களை வென்று தன்கீழ்ப் படுத்திக்கொள்வது மகிபாலனுக்கு மனம் ஒப்பவில்லை. தன்னை இராஜேந்திரன் ஒருசமயம் எதிர்த்தலும் கூடுமென்று அவன் எண்ணினுன். அவன் தனக்குள் மிக்க வலிமை பெற்றவன் என்று எண்ணிக்கொண் டிருந்தான். அதனுல் கர்வங்கொண்ட அவன் இராஜேந்திரனைத் தடுத்து நிற்பது என்று உறுதிகொண்டான். படைகளைச் சித்தப்படுத்திக் கொண்டு அவன் தன் நாட்டு எல்லையிடத்து நின்று இராஜேந்திரன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இராஜேந்திரன், உத்திரலாட தேசத்தின் எல்லையை அடைந்தான். அங்கு அந்நாட்டு அரசன் படைகள் அணிவகுத்து நின்றுகொண் டிருத்தலைக் கண்டு அவன் வியந்தான். இராஜேந்திரன் படைகளைக் கண்டதும் உத்திரலாடத் தரசன் படைகள் கோபங்

கொண்டு ஆரவாரித்தன. இராஜேந்திரன் தன்படை வீரர்களைக் கூவி, வீர மொழிகளைப் புகன்று பகைவர் களைத் தாக்கிக் கடும்போர் புரியும்படி கட்டளையிட்ட னன். வீரர்கள் அவனிடமிருந்து கட்டளை பிறந்த தும் தம்மை மறந்தவர்களாய்ப் பகைவர்மீது பாய்ந்து கடும் போர் புரியத் தொடங்கினர். மகிபாலன் கொதித்து எழுந்து போர் புரிந்தான். அவன் செய்த வீரட்டகாசங்கள் மிகப் பலவே! அம்மம்மா! அப் போர் எவ்வாறு முடிவுபெறுமோ என்று யாவருந் திகைத்தனர். நெடுநாள்வரை மகிபாலனும் போர் புரிந்தான். எனினும் அவன் படைவீரர்கள் களைப் புற்றனர். இராஜேந்திரன் அப்போரில் செய்த யுத்த தந்திரங்கள் மிகப் பல. அவற்றின் பயனாக மகிபாலன் படை வீரர்கள் போர் புரிய வாற்ருது களைப்புற்றனர்.

முடிவில் சோழன் வெற்றிகொண்டான். மகிபா லன் சிறைப்பிடிக்கப் பட்டான். இராஜேந்திரனால் சிறைப்பிடிக்கப்பட்ட அந்த நிலைமையிலும் அம்மகி பாலன் தருக்கிக் கூறிய மொழிகள் பல. அவன், உண் மையில் இராஜேந்திர சோழன் பெருவலியை உணர வில்லை என்றே கூறவேண்டும். இராஜேந்திரன் தன் பிரதானி தளகர்த்தரோடும், படைவீரர்களோடும் பிரயாணமானான். மகிபாலனும் அவர்களோடு சிறைப் பட்டவனாய்ச் செல்லவேண்டியதாயிற்று. இராஜேந் திர சோழன், எல்லாரோடும் யமுனையும் கங்கையும் கூடும் அலகபாத் என்னும் மாயா க்ஷேத்திரத்தை யடைந்தான்.

புண்ணிய பூமி என்று வழங்கப்படும் இப்பரதகண் டத்தில் சிறந்த தலங்கள் என்று பெரியோர்கள் போற்

றிக் கூறும் நகர்கள் பலவுண்டு. அவற்றுள் சான்றோரும் புலவர்களும் போற்றிக் கூறும் புண்ணியக்ஷேத்திரங்கள் ஏழு உண்டு. அவ்வேழு நகர்களும் மக்கட் பிறவியின் பயனை அளிக்கவல்லன. மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் இப்பூமியின்மீது சிலகாலம் வாழ்ந்து இன்பத்தையும் துன்பத்தையும் அவரவர்கள் செய்த வினைக்கேற்ப அனுபவித்து இருக்கின்றனர். நல்வினை தீவினை என்ற இரண்டும் பிறவிக்குக் காரணங்களாகும். அவை பொன் விலங்கும், இரும்பு விலங்கும் போல்வன. புண்ணியம் செய்தார் செல்வ நலன்கள் பெற்று இன்புறுவர். பாவங்களைப் புரிந்தோர் அல்லலுற்றுத் துன்புறுவர். உலகம், யாக்கை, செல்வம், இளமை முதலியன நிலையற்றன என்பதை மண்ணிற் பிறந்த ஒவ்வொருவனும் நன்கறிதல் வேண்டும். ஆதலால் மக்கட் பிறப்பிற் பிறந்தோர்கள் தம் பிறவியின் அருமையை நன்கறிந்து பிறவா நெறிக்கு வழி தேடுதல்வேண்டும். 'அரிது அரிது மானிடராதலரிது' என்று ஒளவைப் பிராட்டியாரும் கூறியிருக்கின்றனரன்றோ?

'மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்று ஒரு தமிழ்நாட்டு ஞானி கூறியுள்ளாரன்றோ? இந்துக்கள் க்ஷேத்திரங்கள்தோறும் சென்று இறைவனைத் தொழுது தம் பாவத்தைப் போக்கிக்கொள்ளும் கருத்துடையோர். ஆதலின் இந்தியா என்னும் இப்பரதகண்டத்தில் பல புண்ணிய க்ஷேத்திரங்கள் தோன்றுவனவாயின. தலங்களில் சிலவற்றில் பிறக்க முத்தியும், சிலவற்றில் வாழ

முத்தியும், சிலவற்றில் இறக்க முத்தியும், சிலவற்றை நினைக்க முத்தியும் தருவனவாகப் பெரியோர்கள் வகுத்துள்ளனர். அத்தகைய தலங்கள் திருவாரூர், அண்ணாமலை, காசி, சிதம்பரம் என்பனவாகும். இவை களே அன்றிச் சில பல தலங்களு முண்டு. முத்தி நகரங்கள் ஏழென முன்னோர் கூறியவை, காசி, காஞ்சி, துவாரகை, அவந்தி, அயோத்தி, மதுரை மாயை என்பனவாம். இவ்வெழு பெருந் தலங்களுள் மாயா க்ஷேத்திரமெனச் சிறப்பித்துக் கூறப்படுவது அலஹா பாத் என்று கூறப்படும் நகரே யாகும். அந்நகர் பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் மிகச் சிறப் புற்று விளங்குகின்றது. அங்கு யமுனையும் கங்கையும் கூடிக் கலக்கின்றன. அந்தர் வாகினி (பாதாளகங்கை) என்னும் புண்ணியப் பேராறும் கலப்பதாகப் பெரி யோர் கூறுவர். அத்தலத்தில் தம் குடியிற் பிறந்த முன்னோர்கட்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களை ஒருவர் செய்து முடிப்பாராயின் அன்னார் பின்னர் எக் காலத்தும் செய்ய வேண்டிய தில்லை யெனப் பெரி யோர் கூறுவர். அத்தகைய புண்ணிய தலம் புத்தர் களால் கயை என்றும் பிரயாகை என்றும் சிறப்பித் துக் கூறப்படுவதாகும். இக்காலத்தில் புத்தர்களுக் கும் இந்துக்களுக்கும் அஃதோர் சிறந்த புண்ணியத் தலமாக விளங்குகின்றது. அப்பெருநகர் சரித்தர சம் பந்தமான விசேஷத்தையும் பெற்றுள்ளது. அந்த நகரில் முன்னும் இன்றும் ஓர் சர்வ கலாசாலை இருந்துவருகிறது. அந்நகர் மாட மாளிகைகளும் கூடகோபுரங்களு மமைந்த பெரிய நீண்ட தெருக் களைக் கொண்டுள்ள தாதலின் மிக்க பொலிவுடன் விளங்குகின்றது.

மகிபாலனை வென்று கங்கையாடும் பொருட்டு எழுந்த சோழன் அலகபாத் நகரை யடைந்தான். அவன் அங்கு யமுனை யாற்றங் கரையோரமாகக் கூடாரங்கள் அடித்துக்கொண்டு தங்கினான். இருகரைகளிலும் மரங்கள் நிறைந்து அழகுபெற்று விளங்கிட, ஆற்றில் நீர் நிறைந்து ஓட, பச்சைப்பசேலென்னும் கரைகளையும் மிக்க நீர்வாழ் உயிர்களையுங் கொண்ட அப்பேராற்றின் காட்சி கண்ணிற்கு ஒரு விருந்தெனத் திகழ்ந்தது. இயற்கை யழகில் ஈடுபடும் தன்மை வாய்ந்த இராஜேந்திரன் அப்புண்ணியப் பேராற்றங் கரையை யடைந்ததும் அளவிலா மகிழ்ச்சியில் ஆழ்ந்தான். அந்நாள் வரை அவன் பட்ட உழைப்பிற்கெல்லாம் அஃதொரு ஆறுதலைத் தந்தது. அகன்று விரிந்து ஆழ முடைத்தாய் ஓடுகின்ற கங்கை நீர்ப் பெருக்கும் யமுனை நீர் வெள்ளமும் ஒன்றோடொன்று கலந்திடும் காட்சி இராஜேந்திரன் மனத்தைக் கொள்ளை கொண்டது. இராஜேந்திரன் அவ்விரு நதிகளும் கூடுகின்ற இடத்திற்குச் சென்று தனியே நின்றுகொண்டு ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே கண்ணிமை கொட்டாது நோக்குவான். அக்காலத்தெல்லாம் அவன் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் பலவே. ஆகாயத்தில் வட்ட வடிவமாய் முழு மண்டலமிட்டுப் பால் போல் வெண்ணிலவைப் பரப்பி இயற்கை வனப்பை எழில்பெறக் காட்டிச் சிறக்கச் செய்த பூரணை நாட்கள் பலவற்றை இராஜேந்திரன் அந்நகரிலேயே கழித்தான். அந்நாட்களில் அவன் கங்கையும் யமுனையும் கூடும் சங்கமுகத்தை யடைந்து இயற்கை வளத்தை இன்புற்று நோக்கி மனமகிழ்ந்தான். இவ்வாறாக அலக

பாத்தில் சிறிதுகாலம் இராஜேந்திரன் தங்கியிருந்த பொழுது தினந்தோறும் சங்கமுகத் துறைக்குச் சென்று தூய புனலாடி இன்புற்று காலங் கழித்து வந்தான். அவன் படைவீரர்களும் மிகக் களிப்போடு அந்நகரில் காலங் கழித்தனர். பின் இராஜேந்திரன் காசி மா நகர்க்குச் சென்றுன்.

அக்காசிமா நகரம் தொன்மை மேன்மையில் மிக்கது. அந்நகரை வாரணசி என்றும் கூறுவர். அந்நகரில் இறந்தவர் முத்தி எய்துவர். சிவபெருமானது கபர்த்தம் என்னும் பெருஞ் சடையினின்றும் இழிந்த கங்கை என்னும் புண்ணிய நதி அந்நகர்க்குப் பெரும் புகழை எய்துவிக்கின்றது. அப்பேராற்றிற் படிவார் புறந் தூய்மையோடு அகந் தூய்மையும் எய்தப் பெறுவர். எம்மதத்தவர்களும் அன்போடு வதியும் ஒப்பற்ற பெரும்பேறெய்தியது புண்ணியத் தலமாகிய காசிமா நகரம். அதன் சிறப்பை இந்திய நன்னட்டுப் புராண இதிஹாசங்கள் சிறக்க எடுத்துக் கூறும். பிறவி என்னும் கட்டை நீக்கி முத்தியை யளிக்கவல்ல அப்பெரு நகர்க்கு இந்துக்கள் யாத்திரையாகச் செல்வார்கள். இராஜேந்திர சோழன் அப்பெரு நகரையடைந்தான். அவன் தன் பெரும்படையொடும் சென்று புண்ணிய நீராம் தண்ணிய கங்கை நீரில் படிந்தான். அப்பேராற்றங்கரையில் எழுந்தருளியுள்ள இறைவனுகிய விசுவநாதரையும் விசாலாக்ஷி அம்மையையும் முறைப்படி வணங்கினுன். பின்; தன் இருப்பிடம் சார்ந்து இராஜேந்திரன் தங்குவானுயினன். இவ்வாறு நாட்கள் சில கடந்தன.

நாட்கள் செல்லச் செல்ல இராஜேந்திரன் உள்ளத்

தில் எழுந்த மகிழ்ச்சி எல்லையில்லாமற் போயிற்று. அவன் தன்னுட்டை அறவே மறந்தான். அப்போாற்றின் வனப்பையும் அத்திருநகரின் சிறப்பையும் கண்டு அவன் இன்புறுவானுயினன். வீரர்களும் தம் நாட்டைவிட்டுப் பிரயாணமானது முதல் அந்நாள் வரை பெரும் துன்பப்பட்டிருந்தனராதலின் அரசன் அங்கு நெடுநாள் தங்கியது அவர்கட்கு நலம் பயப்பதாகியது. மகிபாலன் கூண்டில் அடைபட்ட கிளி போல் ஆயினன். ஆனுல் அவன் சிறையினின்றும் தப்பித்துச் செல்ல முயற்சிகள் செய்தான். இராஜேந்திரன் வடநாட்டிலிருப்பதால் அவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு சென்றுல் மீண்டும் அவன் தன்னைக் கண்டுபிடிப்பது அருமையினும் அருமையென நினைத்தான். என்னே அவன் மூடச் செய்கை! ஓருநாள் அவன் சிறையினின்றும் தப்பி யோட முயன்றனன். ஆனுல் அம்முயற்சி பழுதாயிற்று. அவன் முயற்சியை யறிந்த சில வீரர்கள் அவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்து வந்தனர். மகிபாலன் சில வீரர்களிடம் தான் வரிசையாகச் சில பொருள் கொடுப்பதாயும் தன்னை விட்டுவிடும்படியும் வீரர்களைக் கேட்டான். சோழன் வீரர்களோ இவன் வரிசையைப் பெற விரும்புவர்? அவர்கள் மறுத்ததுவு மன்றி அவனை ஓறுக்கவும் ஆரம்பித்தனர். அந்தோ பாவம்! திருடனுக்குத் தேள் கொட்டினுற்போல் சொல்ல முடியாது சிந்தை கலங்கிச் சும்மாவிருந்தான் மகிபாலன்.

விண்ணில் நட்சத்திரங்கள் மின்மினிபோல் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. ஆனுல் இருட்டும் நிறைந்திருந்தது. கரியதோர் சீலையைக்கொண்டு இவ்வுலக

முழுவதையும் போர்த்தியதுபோல விளங்கியது அற்றை நாளிரவு. காவிரிநாடானது சேனுவீரரும் காவலரும் கண்ணயர்ந்தனர். காகம் முதலிய பறவை கள் கிளைகளில் தூங்கின. நகரெங்கும் அமைதி குடி கொண்டது. நகரில் யாவரும் கண்ணயர்வாராயி னர். உண்மையில் அந்நடு நிசி அச்சத்தைத் தந்தது. மகிபாலன் யாவரும் காணு நிலையில் தன் முயர்சியால் சிறையினின்றும் தப்பித்து வெளிப்பட்டான். அவன் அற்றை நாளிரவில் அநேகக் காவத தூரம் நடக்கத் தீர்மானம் செய்துகொண்டனன். ஆனுல் அவன் கால்கள் எழவில்லை. விடுதலைப்படவேண்டும் என்னும் எண்ணத்தால் செய்யும் முயற்சி முன் பற்றி இழுக்க, அச்சம் பின் பற்றி இழுக்கப் போர்புரிந்து வெற்றி கொள்ள இயலாது இரவில் ஒருவரும் அறியா நிலையில் ஓளிந்து தப்பியோடுவதாகிய அவமானம் அவன் மனத் தைத் துன்புறுத்த, மகிபாலன் செய்வதறியாது திகைத்தான். ஆயினும் சிறையினின்றும் வெளிவந்து விட்டானுதலின் ஒருவித முடிவை உள்ளத்திற் கொண் டனன். அவன் விரைவாக நடக்கத் தொடங்கினுன்.

காவததூரம் சென்றிருப்பான் மகிபாலன் அக் காலத்துள் வீரனெருவன் விழித்தெழுந்தான். தன் காவலிலிருந்த மகிபாலனை அவன் காணவில்லை. அங்கு மிங்கும் தேடலாயினன். மகிபாலனை அவன் காண வில்லை. அவன் மற்றைய வீரர்களை எழுப்பி நடந்த தைக் கூறினன். வீரர்கள் ஆரவாரித்து மகிபாலனைக் கண்டுபிடித்துவர முற்பட்டனர். அன்னுர் அப்பெரு நகர் முழுதும் சுற்றி அலைந்து திரிந்தும் மகிபாலனைக் காண முடியவில்லை. அதற்குள் சோழன் சேனைப்படை

வீரர்களுக்கெல்லாம் அச்செய்தி வெளியாயிற்று. எல்லோரும் அவனைத் தேடிக்கொணர முன்வந்தனர். இவ்விஷயம் காட்டில் பற்றிய தீப்போல் நகரமெங்கும் பரவலாயிற்று. சோழன் சேனைவீரர்களிற் சிலர் பல் வேறு வழிகளைப் பற்றிக்கொண்டு அவனைத் தேடப் புறப்பட்டனர். பாவம்! மகிபாலன் மீண்டும் இப்புலி கள் வாயில் அகப்பட்டால் என்னவனோ!

பொழுது புலர்ந்தது. இராஜேந்திரன் வழக்கம் படைவீரர்கள் இறங்கியிருந்த இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். அப்பொழுது அவ னுக்கு மகிபாலன் செய்த திருட்டுத்தனம் வெளியா யிற்று. இராஜேந்திர சோழன் அடைந்த கோபத்திற் கோ அளவில்லை. அவன் கோபத்தைக் கண்டு படை வீரர்களே நடுக்குற்றனர். அவன் மகிபாலனிடத்தில் கொண்டிருந்த கோபத்தைக் காட்டினும் அவனைக் காவல் செய்திருந்த காவலாளிகளிடம் கொண்டிருந்த கோபமே அதிகமானது. மன்னன் சினத்தையறிந்த மகிபாலனைக் காவல் செய்துகொண்டிருந்த காவலாளி களிற் சிலர் அவனைக் கைப்பிடியாய்க் கொண்டுவந்து விடுவதாக வாக்குறுதி கூறி விரைந்தெழுந் தகன்றனர். அரசன் தன்னிடம் சார்ந்தான். நாட்கள் சில கடந் தன.

இரவுப்பொழுதில் கடிது நடந்து காசியினின்றும் வெளியேறிய காவலன் மகிபாலன், விரைந்து நடந்து சென்றுகொண்டிருந்தான். அவன் கடந்து சென்ற ஆறுகளும் மலைகளும் நகர்களும் பலப்பல. அவன் போகும்பொழுது அவன் மனத்திற் றோன்றிய எண் ணங்கள் எண்ணிறந்தன. நாட்டிற்குச் செல்வதா?

காட்டிற்குச் செல்வதா? என்று அவன் மனத்தில் ஓர் ஐயம் எழுந்தது. நாட்டிற்குச் செல்வதால் அடைவது அவமானமே என அவன் ஆழ்ந்து சிந்தித்தறிந்து கொண்டான். அவன் மனமும் அந்நிலையில் அமைதியற்றிருந்தது. ஆதலின் மனம் அமைதி யடையும் பொருட்டும், சிலகாலம் தான் மறைந்து வாழ்தல் நன்மை பயக்கும் என்பதை எண்ணியும் அவன் காடு நோக்கிச் செல்வானாயினன். வனங்களில் முற்றத் துறந்த முனிவர்களே வதிவராதலின் அவர்கள் ஞானம் கைவரப் பெற்றவர்க ளாதலின் அவர்களை யடைந்தால் நன்மை உண்டாகும் என மகிபாலன் எண்ணினன். முடிவில் மகிபாலன் உறுதிகொண்ட மனத்தை யுடையவனாய் விந்திய மலைக் காடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

துன்பம் வந்தால் தொடர்ந்து வருமன்றோ? கதிரவன் கிரணம் பாயாத இடமும் உண்டோ? காற்று வீசாத இடமும் உண்டோ? கடவுளில்லாத இடமும் உண்டோ? சோழன் சேனைவீரர்கள் கண்டறியாத இடமும் பொருளும் உண்டாமோ? பெருமகிழ்ச்சியுடன் இனித் தப்பித்தோம், உய்ந்தோம் என மனச் சந்தோஷங் கொண்டு காடு நோக்கிச் சென்ற காவலன் மகிபாலனைச் சோழன் சேனைவீரரில் சிலர் கண்டுவிட்டனர். விந்தியமலைக் காட்டை மகிபாலன் குறுகியதும் அவன் தன் முன்னே சோழன் சேனை வீரர்கள் நிற்பதைக்கண்டான். அவன் துணுக்குற்று மெய்ம்மறந்தான். இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கி நிலைகுலைந்தான். திகைப்பு அவன் மனத்தைக் கொள்ளை கொண்டது. அச்சம் அவனை அல்ல லுறுத்தியது.

வாய் குழற, அறிவு மழுங்கியது. மகிபாலன் தன்னிலை மறந்தான். அந்நிலையில் அவனைப் பல இன்னல்களுக் குள்ளாக்கி இழுத்து வந்தனர் இராஜேந்திரனுடைய வீரர்கள். மீண்டும் அகப்பட்டுத் துன்புற்ற நிலையினை யடைந்த மகிபாலன் இராஜேந்திரன் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். அந்நிலையிலும் மகிபாலன் மிக்க கர்வத்தோடு இராஜேந்திரனுடன் உரையாடலானான். இராஜேந்திரன் மகிபாலன் தப்பி யோடியதற்காகச் சினங்கொள்ள வில்லை. ஆனால் அவன் கர்வத்தோடு கூறும் மொழிகளைக் கேட்டுச் சினங்கொண்டான். ஆதலின் அவனுக்கு எத்தகைய தண்டனை விதிக்கலாமென்று தன்னுடனிருந்த அமைச்சர்களைக் கேட்டான். அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து, "மன்னவ, நாம் கங்கை நீராடும் பொருட்டு இங்கு வந்தோம்; வரும் வழியில் எவ்வளவோ நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு, அந்நாட்டரசர்கள் நம் ஏவல் கேட்ப, நாமிங்கு வந்துள்ளோம். நம்மால் வெற்றி கொள்ளப்பட்ட அரசர்கள் பலருள் செருக்கு மிக்க மன்னன் ஒருவன் இம்மகிபாலனே யாவன். இவன் நம்மிடம் சிறைப்பட்டது மல்லாமல் சிறையினின்றும் தப்பி யோடினான். மீண்டும் நம்மால் பிடிக்கப்பட்ட இந்நிலையினும் இவன் தருக்கிப் பேசுகின்றான். இவன் செருக்கை யடக்குதல் நம்முடைய முதற்கடமையே யாகும். ஆதலின் அரசே, இவன் தலையில் கங்கை நீரை ஏற்றுவித்து நம் நாட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்வோம். இவனைத் தமிழ் மன்னர்களான சேர பாண்டியர்கட்குக் காட்டுவோம்" எனக் கூறினர். அரசனும் "அதுவே சரி" என்றமைந்தான்.

இராஜேந்திரன் சோழ நன்னாட்டை விடுத்து வடநாடு நோக்கிச் சென்றது சோழநாட்டுக் குடிகளுக்கு வருத்தத்தைத் தந்தது. அவன் எப்பொழுது மீண்டு வருவானோ என்று அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இராஜேந்திர சோழனும் தன்னாட்டையடைய ஆவல் கொண்டான். அவன் வீரர்களும் அமைச்சர் முதலாயினோரும் சோழ நாட்டை விரைவில் அடைய வேண்டுமென்று வேந்தனிடம் விளங்க எடுத்துரைத்தனர். இராஜேந்திரனும் சம்மதித்தான். எல்லோரும் ஒரு நன்னாளில் கங்கைநீரில் ஸ்நானஞ் செய்து பின் ஒரு குடம் ஜலத்தை எடுத்துவந்து மகிபாலன் தலையில் ஏற்றி அவனோடு சோழநாடு நோக்கிப் பிரயாணமாயினர். வந்திகள் புகழ்ந்து பாடச் சோழன் தன் சேனைகளுடன் சோழநாட்டை நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தான். இடை வழிகளில் பற்பல புண்ணியத் தலங்களில் தங்கி இராஜேந்திர சோழன் சில மாதங்களில் சோழநன்னாட்டை யடைந்தான். இராஜேந்திர சோழனின் வருகையை முன்னமேயே கேள்விப்பட்ட அந்நாட்டுக் குடிமக்கள் அனைவரும் அவனை எதிர் கொண்டழைத்து வந்தனர். அவன் மனமகிழ்ச்சியுடன் தன்னாட்டிற் புகுந்து தலைநகராம் தஞ்சாவூரை யடைந்தான். அன்று அத்தஞ்சாவூர் பொன்னுலகினும் பொலிவு பெற்று விளங்கிற்று. இராஜேந்திர சோழன் தன்னாட்டுக் குடிகளுக்கும் பிறருக்கும் மகிபாலனைப்பற்றிக் கூறி அவன் செருக்கையடக்கும் பொருட்டு அவன் தலையில் கங்கைநீரை ஏற்றிக் கொணர்ந்ததையும் கூறினன். அவ்வரலாற்றனைத்தையும் கேட்ட குடிமக்களும் பிறரும் அவனைக்

கங்கைகொண்ட சோழன் என்று போற்றிக் கூறுவா ராயினர். மகிபாலன் சேர பாண்டியர்கட்குக் காட் டப்பட்டான். அவன் செருக்கு அகன்றது. இரா ஜேந்திர சோழன் அவனைச் சிறையிட்டுத் தஞ்சையி லேயே வைத்திருந்தான். அவன் மகிபாலனுக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்திருந்தனன். முன் சளுக்கிய அரசனை விமலாதித்தன் சிறைப்பட் டிருந்த விடத்திலேதான் மகிபாலன் தன் சிறைவாசத் தைக் கழித்து வந்தான்.

7. கங்கை கொண்ட சோழபுரம்

ஒரு நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமானல் அந்நாட்டில், வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம், கல்வி என்னும் இவை மேம்பட்டிருத்தல் வேண்டும். மக்கள் தாய் நாட்டினிடத்தும், தாய்மொழியினிடத்தும் குறைவறு அன்பைக் கொண்டிருத்தல் வேண்டும். சுதந்தர வுணர்ச்சி ஒவ்வோர் ஆண் மகன் உள்ளத்திலும் பொங்கித் ததும்பி வழிதல் வேண்டும். மக்களிடத்தில், ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ளுதலும், அஞ்சாமையும், ஈகையும் காணப்படவேண்டும். அம்மக்கள் மனப்பான்மைக்கொப்ப அரசனும் நாட்டில் ஒன்றும் குறைவடையாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இவை யாவும் பொருந்திய நாடு எந்நாளிலும் வெற்றிக்கொடி பறக்க மேன்மையுற்று விளங்கும்.

சோழ நாட்டிற்குத் தலை நகர்கள் பல இருந்தன. அவைகளுள் முக்கியமானவை உறையூர், தஞ்சை, திருவாரூர், காவிரிப்பூம்பட்டினம் என்பனவாம். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு நகரை ஒவ்வோரரசன் இராசதானியாகக்கொண்டு அந்நாட்டை ஆண்டுவந்தான். பல நகரங்கள் பல காலங்களில் ஒரு நாட்டில் இராசதானியாக அமைதற்கு உரிய காரணங்கள் பல. ஒவ்வோர் அரசனும் தன் நாடு பலவகையிலும் மேம்பாடுற்று விளங்கவேண்டும் என்று உழைப்பான் அல்லவா? அவ்வாறு நாட்டின் நன்மையைக் கருதி

உழைக்கும் அரசன் பல காரணங்களைக் கொண்டு இராசதானியைத் தனக்குகந்த விடங்களில் ஏதேனும் ஒன்றிற்கு மாற்றிக்கொள்வது வழக்கம்.

வடநாடு சென்று பல தேசங்களையும் பார்த்து நன்கு அறிந்துகொண்டுவந்த இராஜேந்திர சோழன் தன் நாட்டையும் பலவகையிலும் முன்னேற்றம் அடையும்படி செய்ய வெண்ணினன். அதன்பொருட்டு அவன் கற்றறிந்தோர் பலரிடத்தும், தொன்மதியமைச்சரிடத்தும் எவ்வகையில் நாட்டை முன்னேற்றம் அடையும்படி செய்யலாம் என்று உசாவித் தெரிந்துகொண்டான். தன் நாட்டில் ஓரிடமும் விடாது தானே நேரிற் சென்று ஆங்காங்குள்ள குறைவு நிறைவுகளைப் பலர் வாயிலாகக் கேட்டும், நேரில் பார்த்தும் நன்கறிந்துகொண்டான் இராஜேந்திர சோழன்.

இராஜேந்திரன் நீர் நிலைகளை உண்டாக்கியும், ஆறுகளிலிருந்து வாய்க்கால்கள் வெட்டுவித்தும், நிலத்தை அளந்து பகிர்ந்து கொடுத்தும், பயிர்த்தொழிலாளர்களுக்கு முன் உதவி புரிந்து அத்தொழிலில் ஊக்கமூட்டியும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தினான். அவன் காலத்தில் காடுகளாய் இருந்த இடங்களெல்லாம் செந்நெல்லும், கரும்பும், வாழையும் செழித்து வளரும் கழனிகளாயின. நாடு செழுமை பெற்றது. மக்கள் அனைவரும் எவ்வகைத் தானியத்தையும் எளிதில் பெற்றனர். 'சோழ நன்னாடு சோறுடைத்து' என்னும் முன்னோர் மொழி பொன்மொழி யாயிற்று. இராஜேந்திரன் ஆறில் ஒரு கடமை கொண்டான். அதனால் வரும் பொருளையும் மக்கள் நலங்கருதியே

அவன் செலவிட்டு வந்தான். அவன் நாட்டில் பிற நாட்டு மக்கள் வந்து குடியேறி வாழ்வாராயினர். உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்கும் நாட்டில் மக்கள் நிறைந்து குடியேறி வாழ்தல் இயல்பேயன்றோ?

இராஜேந்திரன் கல்விச் சாலைகள் பல கட்டுவித்தான். அவன் இனிய செந்தமிழ்ப் பயிற்சி யுடையவன். ஆதலின் கல்வியின் பெரும் பயனை அவன் நன்குணர்ந்திருந்தான். நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வியே முதற் காரணம் என்பதை அவன் நன்குணர்ந் திருந்தான். தாய் மொழியைத் தன்னாட்டு மக்கள் செவ்வையாக உணர்ந்திருத்தல் வேண்டும் என்று அவன் விழைந்தான். அதனால் அவன் நாட்டில் ஒவ்வொரு கிராமங்களிலும் பாடசாலைகள் அமைத்தான்; தமிழ்க் கழகங்களை ஏற்படுத்தினான். நூல் நிலையங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. தமிழ்ப் புலவர்களை இராஜேந்திரன் அன்புடன் வரவழைத்து அவர்களிடம் உண்மையான பக்தியோடு ஆதரித்து வந்தான். நாவின் கிழத்தியாகிய கலைமகள் புலவர்களிடம் வசித்தலால் பூவின் கிழத்தியாகிய இலக்குமி அவர்களைச் சேராள் அல்லவா?

"நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலர்ந்து."

என்பது ஆன்றோர் வாக்கு. அவர்க ளிருவரும் மாமியும் மருகியும் ஆவர். உலகில் மாமியும் மருகியும் ஒருமனப்பட்டுக் குறைவொன்று மின்றி ஒருவரை யொருவர் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டு

இன்புற்று வாழ்தலைக் காண்பது அருமையினும் அருமை. அவ்வாறு இருக்கக் கண்டால், அத்திப் பூவும், ஆகாயத் தாமரையும், முயற்கோடும், மலடி மகனும் உண்டென்றே கூறிவிடலாம். ஆதலின் புலவர்களுக்கு இயற்கையாகப் பிறக்கும்போதே உடன்பிறந்து அவருடன் வளர்ந்து வருவது வறுமை. அத்தகைய வறுமையை நீக்கி அவர்களைக் காத்தான் இராஜேந்திர சோழன் என்றால் அவன் புலவர்களிடத்திலும், தமிழ்மொழி யிடத்திலும் வைத்திருந்த அளவிலா அன்பை எடுத்து இயம்பவும் கூடுமோ? இராஜேந்திர சோழன் கவிகள் இயற்றும் சிறந்த கல்வி படைத்தவன். அவன் எக்காலத்திலும் பண்டிதர் கூட்டமாகிய நக்ஷத்திரங்க ளிடையே களங்கமற்ற பூரணச் சந்திரன்போல் விளங்கினன். தமிழ்ப்புலவர்கள் பாடிய கவிகளைக் கேட்டு அவை களின் சொல் நயம், பொருள் நயங்களைக் கேட்டு உணர்ந்து இன்புறுவதும், தான் கவிகள் சமைப் பதும் பொழுது போக்காகக்கொண்டு இராஜேந்திரன் வாழ்ந்து வந்தான். அவனது கல்வியின் அகலத் தைக் கண்டறிந்த மக்கள் அவனுக்குப் பண்டித சோழன் என்று சிறப்புப் பெயரளித்து மகிழ்ந்து கொண்டாடினர். அவன் காலத்தில் நூல் நிலையங்கள் (Libraries) பல இருந்தன. அவன் நாட்டில் கல்வி யறிவில்லாதவன் ஒருவனும் இலன்.

கைத்தொழிலும் வர்த்தகமும் அக்காலத்தில் எவ் வாறிருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஜாவா, சுமித்திரா, கிரீஸ், பர்மா, பாரசிகம் முதலான தேசங்களோடு வர்த்தக சம்பந்தம் பெற்றிருந்தது

செழுந்தமிழ்ச் சோழ நன்னாடு. அந்நாடுகளிலுள்ள கைதேர்ந்த சிற்பிகளும், ஓவியக்காரர்களும், கலம் சமைப்போரும், பிறதொழிலாளரும் சோழ நாட்டையே தமக்கு வாழிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் கப்பலோட்டி வாணிபம் பேணி வந்தனர். இதனைத், "திரைகட லோடியும் திரவியந் தேடு" என்னும் தமிழ் முதுமொழி நன்கு விளக்கும். தன் நாட்டில் இல்லாத கைத்தொழில்களைப் பிறநாட்டுக் கைத்தொழிலாளர்களை அழைத்து வந்து தன்நாட்டு மக்களுக்குக் கற்பித்தனன் இராஜேந்திரன். வாணிபத்தின் காரணமாகப் பல துறைமுகப் பட்டினங்கள் அவன் நாட்டில் ஏற்பட்டன. ஆங்காங்குச் சுங்கச் சாலைகளையும், (Custom houses) கலங்கரை விளக்கங்களையும் (Light houses) உண்டாக்கினன் இராஜேந்திரன். கப்பல் வியாபாரத்தைக் காப்பாற்றும் பொருட்டாக அவன் ஒரு கப்பற்படையையும் வைத்திருந்தான். ஆதலால் அவன் நாட்டு மக்கள் அச்சமின்றி வங்க மேறிச் சென்று வாணிபம் பேணினர். சுருங்கச் சொல்லின் அவன் நாட்டில் வேளாண்மை, கல்வி, வாணிபம், கைத்தொழில் முதலியன சிறக்கலாயின. அத்தகைய நாடு முன்னேற்றமடைவது ஒரு வியப்போ! அவன் நாட்டில் அறமும் செல்வமும் பெருகின; மறம் அறவே ஒழிந்தது; மக்கள் இன்புற்றனர்.

யாவும் ஒழுங்குபட நாட்டில் அமைந்தமையைக் கண்ட இராஜேந்திரன் எல்லையில்லாத மகிழ்ச்சி கொண்டான். அவனுக்குத் தலைநகரை வேறிடத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

தன் நாட்டுத்தலைநகர் நாட்டின் நடுவிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்று அவன் கருதினான். அவ்வாறு அமைவதும், அரசியலுக்கும், வர்த்தகத்திற்கும் ஏற்புடைத்தாகவும், குடிமக்களின் போக்குவரவிற் கேற்றதாகவும் பொருந்தியுள்ள விடமாகவும் இருத்தல் வேண்டும் என்று எண்ணினன். தன் நாட்டில் தன் பெயரால் தலைநகர் அமையவேண்டும் என்ற விழைவு இராஜேந்திரன் மனத்தில் தோன்றியது. ஆதலின் அவன் யாவும் பொருந்த நல்லதோர் இடத்தை நாடுவானானன்.

காவிரியாற்றின் வடகரையில் அவன் விழைந்தவாறு தலைநகர் சமைப்பதற்கு ஏற்றதோர் இடம் இருந்ததை இராஜேந்திரன் நன்கறிந்தான். அவ்விடத்தை நேரில் சென்று பார்த்து அங்கேயே தலைநகரை அமைப்பதற்கு இராஜேந்திரன் ஏற்பாடுகள் செய்தனன். அவன் நாட்டில் செல்வம் மிகப் படைத்த செல்வர் பல்லோர் புதிதாக ஏற்படுத்தப்படும் தலைநகரில் குடியேறி வாழ விரும்பினர். அவர்கள், பிற நாட்டுச் சிற்பிகளையும், கொல்லர்களையும், தச்சர்களையும் கொண்டு, பதுமைகள் பதிக்கப்பெற்ற கண்கவர் வனப்பு மிக்க கவினார் மாளிகைகள் கட்டுவித்தனர். மண்டபங்களும், மாளிகைகளும், பூம்பொழில்களும், ஆடரங்குகளும், பந்தாடு தெற்றிகளும், கழக மண்டபங்களும், மேடைகளும், பிறவும் அவ்விடத்தே இரண்டொரு ஆண்டுகளுக்குள் நிறைந்து அவ்விடத்தை அழகுபடுத்தின. அரச மாளிகை அவைகளின் நடுவில் ஆகாய மளாவி அழகு செய்தது. எங்கும் தோரணங்களும், துவ

ஜங்களும் காணப்பட்டன. சந்திகளில் அந்நாட்டு நல்லோர் சிலைகள் அமைக்கப்பட்டுச் சிறந்து விளங்கின. புலிக்கொடி அரண்மனையின் முதல் வாயில் கோபுரத்தின் உச்சியில் விண்ணைத் தொடுவதை ஒப்ப ஓங்கி நின்று பறந்தது. ஒரு குன்றின் மீதிருந்தேனும், ஆகாய வீதியில் படர்ந்தேனும் அந்நகரின் சிறப்புற்ற காட்சியைக் காண்பாராயின், அன்னார் பொன் சுதை தீட்டிய கோபுரங்களின் கலசங்களைக் கண்டு, அந்நகர் பொன்நாட்டு அமராவதியோ என்று ஐயுறுவர். சுருங்கச் சொல்லின் அந்நகர் பல்வகையினும் ஒரு நாட்டின் தலைநகராயிருத்தற்கு ஏற்ற பெற்றி வாய்ந்திருந்தது.

இராஜேந்திர சோழன் சோதிட நூற் புலமை வாய்ந்த நல்லோர் கூறிய நன்னாளில் செல்வர்கள் புடைசூழ்ந்து வரத் தஞ்சாவூரை விடுத்து அந்நகரைத் தலைநகராகக்கொண்டு குடியேறினன். செல்வர்களால் குடியேற்றப்பட்ட அந்நகர் அன்று தேவேந்திரலோகம் போல் விளங்கிற்று. செல்வர் புடைசூழவும், நால்வகைச் சேனைகள் சூழ்ந்து வரவும் அப்புது நகருட் புகுந்த இராஜேந்திரன்; தேவர்கள் புடைசூழ அமராவதியுட் புகும் தேவேந்திரனை ஒப்ப விளங்கினன். அன்று அந்நகர் விளங்கிய தோற்றத்தைக் கண்டு அளகாபுரியும், அமராவதியும் நாணி அந்தரத்தில் அமைந்தன என்று புலவர்கள் சிறப்பித்துக் கூறுவராயினர். கங்கைகொண்ட சோழனுன இராஜேந்திரனுல் புதிதாகச் சமைக்கப்பட்டு அவனுல் குடியேற்றப்பட்டது அந்நகர் ஆதலின், அதனை அனைவரும், " கங்கை கோண்ட சோழ புரம் " என்று சிறப்பித்துக்

கூறுவாரானார். அந்நகர் அதுமுதல் சோழ நன்னாட்டிற்கு இராசதானியாய் விளங்குவதாயிற்று. இராஜேந்திரன் அந்நகரில் கட்டிய பெருங்கோயிலில் இருந்துகொண்டு சோழநாட்டின் ஒவ்வோர் இடத்தையும் தானே நேரிற் சென்று கண்டு குற்றங் குறைகளை நீக்கி நீதி புரிந்து வந்தான். குடிகள் அனைவரும் அவனுடைய அறிவாற்றலைக் கண்டு புகழ்ந்து கொண்டாடினர். சோழநாட்டிற்குக் கங்கை கொண்ட சோழ புரம் இராசதானித் தலைநகர் ஆனதும் அந்நாடு, வர்த்தகம், கைத்தொழில், வேளாண்மை, கல்வி முதலியனவற்றில் சீர்பெற்றுத் துலங்குவதாயிற்று. மக்கள், செல்வம் படைத்து அன்புற்று இன்புற்று வாழ்வாராயினர். பிறநாட்டு மக்களும் சீர்பெறு சோழ நாட்டின் செம்மையைக் கேள்வியுற்று மேவி வாழ்வாராயினர். இராஜேந்திரன், தன் நாடு மேன்மையுற்றுத் திகழ்வதைக் கண்டு அளவிலா ஆனந்தம் கொண்டான். குடிகளின் நன்மையே நாளும் நாடி உழைக்கும் ஒரு மன்னனுடைய ஆட்சியில் நாடு விசாலப்படுதலும், செல்வநிலை மேம்பட்டு விளங்குதலும், குடிகள் இன்புற்று வாழ்தலும் ஒரு வியப்பாமோ? இராஜேந்திரன் ஆட்சியைக் குடிகள் இராமராச்சியம் என்று கூறிப் புகழ்ந்தனர்.

8. அம்மங்காதேவியின் திருமணம்

நாட்டில் யாவும் நலம்பெற வமைந்தன கண்டு இரா ஜேந்திரன் மகிழ்பூத்தான். அவன் மனத்தில் அமைதி குடி கொண்டது. தந்தையைப்போல் தானும் பல போர்களில் வெற்றி பெற்றதும் ; தந்தையின் காலத் தில் இராச்சியம் பரவிச் செம்மையாக ஆளப்பட்டு வந்ததைப் போலத் தன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த தையும் எண்ணி எண்ணி அளவிலா ஆனந்தங் கொண்டான். அவன் நாட்டில் உள்ளோர் அவனை மனுவின் அவதாரம் என்றே கூறிப் புகழ்ந்தனர். அவன் இசை எங்கும் பரவியது.

முன்நாளில் சோழ வரசர்கள் சோழ நாட்டி லுள்ள பிடவூர், அழுந்தூர், நாங்கூர், நாவூர், ஆலஞ் சேரி, பெருஞ்சிக்கல், வல்லம், கிழார் முதலிய ஊர் களிலிருந்த உழுவித்துண்போர் குடியில் வந்த வேள் என்னும் பட்டம் பெற்ற வேளிர் குலப் பெண்களை மணந்துகொள்வதுண்டு. அவ்வழக்கத்தைத்தழுவி இராஜேந்திரனும் அவ்வூர்களிலிருந்து பெண் கொண் டனன். இராஜேந்திரனுக்கு மனைவியர் பலர் இருந்த னர். அவர்களிடமாக இராஜேந்திரனுக்கு மக்கள் பலர் இருந்தனர். அவர்களில் பட்டமகிஷியிடமாக இராஜாதிராஜன், இராஜேந்திரதேவன், வீரராஜேந்திரன் என்ற ஆண்மக்களும், அம்மங்காதேவி என்ற ஓர் பெண் குழந்தையும் இருந்தனர். ஆண்மக்கள் மூவரும் மிகவும் ஜாக்கிரதையாக வளர்க்கப்பட்டு வளர்ந்து வந்தனர்.

இராஜாதிராஜன், இராஜேந்திரதேவன், விரராஜேந்திரன் ஆகிய ஆண்குழந்தைகள் மூவரும் உரிய பருவம் அடைந்ததும் தக்க ஆசானிடம் ஒப்புவிக்கப் பட்டுக் கல்வி கற்றுவந்தனர். அரச குமாரர்கள் நன்கு கற்றுணரவேண்டிய ஆயுதப் பயிற்சியையும், போர் புரி முறையையும், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவைகளையும் செவ்வனே பயின்றனர். அவர்கள் மேனி உரம் பெற்று விளங்கிற்று. நாட்டோர் அனைவரும் அவர்கள் உருவையும் வலியையும் கண்டு சிறப்பாகப் பேசிக்கொண்டனர். இளஞ்சிங்கங்கள் எனக் கூறப்பட்ட அவ்வரசிளங் குமரர்கள் தந்தையைப்போல் இளம் பருவத்திலேயே போர்க் களத்திற் புகுந்து பகைவர் வலியழித்து வெற்றியொடு வந்தனர். அக்குமாரர்களைப் பகைவர்கள் காணின் அரியேற்றைக் கண்ட யானைபோல் கலங்கினர் என்றால் அவர்கள் வல்லமையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இராஜேந்திரன், தன் புதல்வர்கள் வலிமை பெற்று வீரர்களாய்த் தனக்கு உதவி புரியும் தகைமையை நோக்கி மனமிக மகிழ்ந்தான். மைந்தர்கள் அத்தகையராக விளங்கியது அவனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது.

இராஜேந்திரன் தென் நாடுகளில் போர் புரிந்து கொண்டிருக்கும்பொழுது இராஜாதி ராஜன் குந்தளரைத் தாக்கச் சென்றான். அக்காலத்தில் குந்தளதேசம், ஆஹவமல்லன் என்பவனால் ஆளப்பட்டு வந்தது. ஆஹவமல்லன் சிறந்த போர் வீரன்; மிக்க வலிமை பெற்றவன். அவனிடம் போரிற் பழகிய சிறந்த காலாட் படையும், குதிரைப் படையும் இருந்தன. அவ

னுக்கு விக்கி, விஜயாதித்தன் எனும் புதல்வர்கள் இருந்தனர். அவர்களிருவரும் போர்ப் பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கினர். மற்றும் அவனிடம், பலபோர்களை எளிதில் வென்று பகைவர்களாகிய ஆட்டு மந்தைக்கு ஓர்புலி போன்று விளங்கிய தளகர்த்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சங்கமய்யன் என்பர். அவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; யுத்த தந்திரங்களை நன்குணர்ந்தவன். அவனுக்கு அடங்கிய கண்டப்பையன், கங்காதரன் என்னும் இரு சேனைத் தலைவர்கள் இருந்தனர். அவர்கள் போர்க் களத்தில் சேனைகளை அணிவகுத்துப் பகைவர்களை எதிர்த்துப் போர் புரிவதில் மிகச் சிறப்புற்றவர்கள். அவர்கள் நாட்டிலும் பிற நாடுகளிலும் அத்தளகர்த்தனையும், அவ்விரு சேனைத் தலைவர்களையும் பற்ற மிகைப்படக் கூறுதார் இல்லை. அவர்களின் உதவியை மிகுதியும் பெற்ற ஆஹவமல்லன் செருக்குடையவனாய்த் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று நினைத்து வாழ்ந்து வந்தனன்.

இராஜாதி ராஜன் தன் இரு தம்பிகளுடனும் திரண்ட சேனைகளுடனும் குந்தளதேசம் நோக்கிப் படையெடுத்துச் சென்றான். சோழன் படை எடுத்து வருகின்றான் என்பதைக் கேள்விப்பட்ட குந்தள வரசனான ஆஹவமல்லன் தளகர்த்தனையும், இருசேனைத் தலைவர்களையும் கூவிச் சோழன் போருக்கு வந்திருப்பதை அறிவித்துச் சேனைகளை ஆயத்தப்படுத்தும்படி கட்டளையிட்டான். தளகர்த்தன் 'போர்' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் மிகக் களிப்புற்றவனாய்க் குன்றென வளர்ந்த தோள்களைக் கொட்டி

பார்த்து ஆஹவமல்லனை நோக்கி, "மன்னவ, நெடு நாட்களாகப் போர் இல்லாமையினலே என் இரு திண் தோள்களும் நசைகொண்டிருந்தன. போர் உண்டு என்னும் சொல்லைக் கேட்ட இன்றைய தினமே அந் நசை நீங்குதற்குரிய காலம் போலும்! மன்னவ, தேவ ரேயாயினும், கூற்றுவனே யாயினும், மற்று, யாவரே யாயினும் முறியடித் தோட்டிடுவேன் நான் என்பதைக் கூறவும் வேண்டுமோ?" என்று உரப்பிக் கூறினன். ஆஹவமல்லன் தளகர்த்தன் மொழிகளைக் கேட்டு மதர்த்துக் களித்தோனுய்த்தானும் போர் புரிய எண்ணிப் போர்க் கோலம் பூண்டு தானைகளுடன் புறப்பட்டனன்.

இருதிறத்தார் சேனைகளும் போர் முனையில் அணி வகுக்கப்பட்டு ஆரவாரித்து நின்றன. சினந்து நின்ற இருபடைகளையும் கண்ணுற்றவர்கள் யுத்தம் யாதாகுமோ என ஐயுற்றனர். போரும் மூண்டது. இராஜாதி ராஜனும், அவன் தம்பிமார்களும் கிளர்ந் தெழுந்த சினத்தோடு படைவீரர்களுக்கு ஊக்க மூட்டிப் பாங்குறப் போர் புரிவாராயினர். குந்தள ராஜனன ஆஹவமல்லனும், தளகர்த்தனும், இரு சேனைத் தலைவர்களும் அந்த யுத்தத்தில் தோற்றிய நிலையைக் கண்டு கூற்றுவனும் அஞ்சினன் என்றே கூறவேண்டும். அவர்கள் புரிந்த யுத்த தந்திரங்கள் மிகப் பல. அவர்கள் போர் புரியும் விமரிசையைக் கண்டு இராஜாதி ராஜனும் அவன் தம்பிமார் களும் வியப்புற்றனர். நெடுநாட்கள்வரை யுத்தம் தொடர்ந்து நடந்து வந்தது. அந்நிலையில் யுத்தத் தின் முடிவு யாதாகுமென்று ஒருவரும் துணிந்து

கூறவியலாதவராயினர். குந்தளராஜனும், அவன் படைவீரர்களும் சிறிதும் சலிப்பின்றிக் களைப்புறுது போர் புரிந்துவந்தனர். குந்தளராஜன் க்ஷத்திரிய குலத்தவன் அல்லனோ?

ஆஹவமல்லன் சளுக்கிய குலத்தைச் சேர்ந்தவன். சளுக்கியர் என்பவர்கள் க்ஷத்திரியர்கள். அவர்கள் பிரமாவின் உள்ளங்கையாகிய சுளுகத்தினின்றும் தோன்றியவர்கள் என்று கூறப்படுவர். அவர் களைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவர். அவர்கள் முதல் முதலில் அயோத்தியில் அரசாண்டவர்கள். அவர்கள் சந்திர குலத்தவர்கள். ஹாரீதி புத்திரர் என்றும், மானவிய கோத்திரத்தவர் என்றும் அவர் கள் தங்களைச் சிறப்பாகக் கூறிக்கொள்வர். ஆரும் நூற்றுண்டு முதல் எட்டாம் நூற்றுண்டுவரை அவர் கள் சிறப்புற்று விளங்கினர். அவர்களில் முதல் அரச ஞன ஸ்ரீபுளகேசி வல்லபமகாராஜன் என்பவன்விந் திய மலைக்குத் தெற்கில் வாதாபி என்னும் நகரைத் தலைநகராகக்கொண்டு மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்தனன். அவன் பேரனாகிய இரண்டாம் புல்கேசி என்பவனால் சளுக்கிய ராஜ்யம் பரவிதலுற் றது. அதனல் அக்குலத்திற்கே சிறப்புண்டாயிற்று. புலகேசி—சளுக்கிய குல திலகன் என்னும் நூல் நன்கு அவன் சரிதையை விளக்கிக்கூறும். அப்புலகேசி வடநாட்டில் மிக்க வலிமை பெற்றிருந்த சிலாதித்தன் என்னும் ஹர்ஷவர்த்தனனையும், தெற்கில் வலிமை பெற்றிருந்த பல்லவர்களையும் வென்று சிறப்புற்றிருந் தான். அவன் நாடு விந்தியம் முதல் கன்னியாகுமரி வரைப் பரவியிருந்தது என்றல் அவன் வலிமையைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?

அத்தகைய சிறப்புப் பொருந்திய சளுக்கியர் குலத்தில் வந்தவன் ஆஹவமல்லன். அவனை முதல் சளுக்கிய ஆஹவமல்லனுன **சோமீசுவரன்** என்று கூறுவர். அவன் மைந்தர்களான விக்கியை **விக்கிரமாதித்தியன்** என்றும்; விஜயாதித்தனை **விஷ்ணு வர்த்தன விஜயாதித்தன்** என்றும் கூறுவர். ஆஹவமல்லன் கி. பி. 1044 முதல் 1068 வரையிலும் அரசாண்டான். விக்கி கி. பி. 1066 முதல் 1076 வரையிலும் சிறந்து விளங்கினுன். விஜயாதித்தன் கி. பி. 1064 முதல் 1074 வரையிலும் சிறந்து விளங்கினுன்.

இயற்கையாக வீரத்தன்மை பொருந்திய சளுக்கியர் குலத்தில் பிறந்த ஆஹவமல்லன் இராஜாதிராஜனேடு கடும்போர் புரிந்து பகைவர்களுக்கு அச்சத்தை யுண்டாக்கினுன் என்பது வியப்போ? சளுக்கியருடன் போர் புரிந்து வென்று அவர்களைச் சிறைப்பிடித்து வந்து, அவர்கள் வீரத்தைக் கண்டு மகிழ்ந்து சிறப்புக்கள் செய்து பெண் கொடுத்துச் சம்பந்தங்கொண்டு நட்புப் பாராட்டிய சோழர் குலத்து உதித்த இராஜாதி ராஜன் ஆஹவமல்லன் ஆற்றலுக்கு அஞ்சிடாது கடும்போர் விளைத்தது ஓர் வியப்போ? போர் நெடுநாட்கள்வரை நடந்தது. முடிவில் இராஜாதி ராஜன் வெற்றி பெற்முன். ஆஹவமல்லன் தோல்வியுற்முன்.

ஆஹவமல்லனுடைய யானைகளும், குதிரைகளும், ஒட்டகங்களும் இராஜாதிராஜனல் போர்க்களத்தில் பிடிந்துக்கொள்ளப்பட்டன. இராஜாதி ராஜனிடம் அவன் கப்பங் கட்டுவதாய் ஒப்புக் கொண்டான். தன்னிடமிருந்த பல விலை யுயர்ந்த பொருள்களையும்

திரவியத்தையும் ஆஹவமல்லன் இராஜாதி ராஜனுக்குக் கொடுத்தான். யாவற்றையும் பெற்றுக்கொண்ட இராஜாதி ராஜன் வெற்றி முரசு இயம்ப வாகை சூடிப் படைகளுடன் தஞ்சாவூர் வந்தடைந்தனன். தென்னாட்டில் போர்புரிந்து கொண்டிருந்த இராஜேந்திரனும் அக்காலே வந்து அடைந்தனன். மைந்தன் சளுக்கிய குலத்தவரான குந்தளரோடு சண்டை செய்து வெற்றியுடன் மீண்டதைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டனன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ? இராஜேந்திரன் இளமையில் சளுக்கிய விமலாதித்தனோடு பொருது வெற்றி பெற்று வரவில்லையா ? 'தந்தையைப் போல் தநயன்' என்னும் ஆன்றோர் மொழி பழுது படுமோ ? 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்பது பழிமொழி. அதற்கு இலக்கானோர் சோழர் குலத் தோன்றல்கள் என்றால் அக்குலத்தின் பெருமையை யாரே அளவிட்டுக் கூற வல்லார் ?

இராஜேந்திரனுக்கு அம்மங்காதேவி என்று ஒரு பெண் இருந்தாள் என்று கூறினோம் அல்லவா ? அவள் இளமைப் பருவம் முதற்கொண்டு பல நூல்களைத் தக்க ஆசானிடம் கற்றுக்கொண்டிருந்தனள். அக்காலத்தில் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் செம்மையான கல்வியைப் பெற்றிருந்தனர். அவர்கள் பெற்றிருந்த சீரிய கல்வியின் திறத்தையும், ஒழுக்கத்தையும், பண்டை நூல்களால் நன்குணர்ந்த அறிஞர்கள் நடுநிலைமையோடு ஆராய்ந்து காண்பராயின் இக்காலத்தில் பெண் கல்விக்குப் பெரிதும் பாடுபடும் முயற்சி யுடையார் கொள்கை எத்தகைய தென்பது

நன்கு புலனாகும். அக்காலத்தில் பெண்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அக்காலத்தில் அளிக்கப்பட்டிருந்த சுதந்தரத்தின் தன்மையை இக்காலத்தில் பெண்கள் அடைய விரும்பும் சுதந்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் முற்காலத்தில் வழங்கிய சுதந்திரமே சீரும் சிறப்பும் பெற்றது என்பது நன்கு புலனாகும். அக்காலத்தில் பெண்கள் மிகவும் கௌரவிக்கப்பட்டார்கள். இவற்றை எல்லாம் நன்னூல்களைக் கொண்டு ஆய்ந்தோராது பலர் பலவாறு கூறுகின்றனர். பெண்களுக்குக் கல்வி, சுதந்திரம், கௌரவம், முதலியன அளித்துத் தெய்வமாகக் கொண்டு போற்றிய புண்ணிய நாடு நம் இந்து நாடு. எத்துணையோ கற்பரசிகளும், எத்துணையோ வீரத் தாய்மார்களும் விளங்கிய பொன்னாடு இந்து நன்னாடு. அதனாலன்றோ பன்னூற்களும், கோயில்களும் இந்நாட்டில் அவர்களைப்பற்றி விளக்குவிப்பனவாக எழுந்துள்ளன.

அம்மங்காதேவி சீரிய கல்வி படைத்தவள். இராஜேந்திரனுடனிருந்து அத்தையைபோல் அரசியல் நெறிகளை நன்கு உணர்ந்திருந்தாள். பல தடவைகளில் போர்க்களத்தில் தந்தையும் தமையன்மார்களும் முனைந்து போரிடுகையில் அம்மங்காதேவி அரசியலை அமைவுற நடத்தி வந்திருக்கின்றாள். மற்றும், அவள் அரச குமாரர்களுக்குரிய வில், வாள் பயிற்சியும், குதிரை யேற்றமும், யுத்த தந்திரங்களும் நன்கு பயின்றிருந்தாள். நற்குணங்கள் பலவும் அவளிடத்தில் ஒருங்கே பொருந்தி யிருந்தன. அவளை அனைவரும் குணக்குன்று என்றே கூறிப் புகழ்ந்தனர்.

ஒப்புயர் வற்ற அவள் வடி வழகைக்கண்டோர் அனை வரும் அலைமடந்தையே அவனியில் அவதரித் தனளோ என்று ஐய முற்றனர். சுருங்கச் சொல்லு மிடத்து அவள் உருவும், திருவும், குணமும், நலமும், கல்வியும், ஆற்றலும் ஒருங்கு பெற்றிருந்தனள்.

அம்மங்காதேவி மணப் பருவ முற்றிருந்தனள். அவளுக்கு வதுவை செய்து காணவேண்டுமென்று இராஜேந்திரன் மிக்க ஆவல் கொண்டான். அந்நிலையில் அவளுக்குரிய கணவனைத் தேர்ந்தெடுத்தல் அரிதா யிருந்தது. இராஜேந்திரன் தங்கையாகிய குந்தவை யும், விமலாதித்தனும் அம்மங்காதேவியைத் தம் புதல் வன் சளுக்கிய இராஜ ராஜனுக்கு மனைவியாக்க விரும் பினர். அவ்வாறு செய்தற்கு அவர்கள் விழைந்தது என்னையோ எனின் சோழர் குலத்திற்கும் சளுக்கிய குலத்திற்கும் குந்தவையை விமலாதித்தனுக்கு மணம் செய்துகொடுத்ததால் சம்பந்தம் ஏற்பட்டது. அதற்குமுன் சளுக்கியர்களுக்கும், சோழர்களுக்கும் சம்பந்தம் இல்லை. பின்னும் சம்பந்தம் செய்து கொள்ளாதிருந்தால் இரு குலத்தாருக்கும் சம்பந்தம் தடைபட்டு அற்றுவிடும். ஆதலால் அத்தகைய சம் பந்தம் என்றும் நீங்காதிருக்கும்பொருட்டே அம் மங்காதேவியை இராஜ ராஜனுக்கு மணஞ்செய்விக்க விரும்பினர். மற்றும், குந்தவை இராஜேந்திர னிடத்து மிக்க அன்புடையவள். ஆதலின் அவன் மகளைத் தன் மருமகளாகக் கொள்ள விழைந்தனள்.

விமலாதித்தனும் குந்தவையும் தம் வெங்கி நாட் டைவிட்டுப் புறபட்டுச் சோழ நாட்டிற்கு வந்தனர். அக்காலை இராஜ ராஜனும் உடன் வந்திருந்தான்.

இராஜேந்திரன் அவர்களை அன்புடன் வரவேற்ருன். ஒருநாள் குந்தவை தன் கருத்தை இராஜேந்திரனிடம் கூறினுள். விமலாதித்தன் இராஜேந்திரனைப் பன்முறையும் அம்மங்காதேவியைத் தன் மைந்தன் இராஜராஜனுக்கு மணஞ்செய்து வைக்கும்படி கேட்டுக்கொண்டான். இராஜேந்திரனுக்கும் அம்மங்காதேவியை இராஜராஜனுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்ற எண்ண முண்டு. ஆயினும் அவன் தன் மனைவியர் விருப்பத்தையும் அம்மங்காதேவியின் கருத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டியவனுனன்.

காவிரியாற்றில் நீர் தண்ணென்று ஓடிக்கொண்டிருந்தது. இரு கரைகளிலும் உள்ள பூஞ்சோலைகளில் மலர்கள் புஷ்பித்திருந்தன. பறவைகள் எங்கும் களிகொண்டு ஒலித்துக்கொண்டிருந்தன. காற்று சரீரத்திற்குப் பொருந்தும்படியாக வீசிக்கொண்டிருந்தது. ஒரு கட்டழகமைந்த பெண் ஒரு சோலையில் ஒரு மகிழ மரததின் அடியில் இடப்பட்டிருந்த சிலாதலத்தில் (கற்பாறை) அமர்ந்திருந்தாள். அங்குக் 'கம்' என்று மணம் வீசிக்கொண்டிருந்தது. அவள் எதிரில் சில பெண்கள் சிறு சிறு பூக்கூடைகளில் பல்வகை நறுமணங் கமழும் மலர்களைப் பறித்து நிரப்பிக்கொண் டிருந்தனர். அப்பெண், அம்மலர்களில் ஒரு மலரைக் கையில் எடுத்து அதனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஒருத்தி பல்வகை மலர்களையும் சேர்த்து அலங்காரமாக ஒரு மாலையைத் தொடுத்து அதனைக் கொணர்ந்து சிலாதலத்தில்

அமர்ந்திருந்த நங்கையின் கழுத்தில் சாத்தினள். பல வேறு நிறங்களுடன் பல்வேறு மலர்களால் தொடுக்கப்பட்ட நறுமணங் கமழும் மாலை அவ ளுடைய முழங்கால் வரையில் தொங்கிற்று. அம்மாலை மிக்க அழகு அளித்தது. அந்நிலையில் அவள் மன மகிழ்ந்து கையிலுள்ள மலரைக் கருத்தொடு கவனித் துக்கொண்டிருந்தாள். இந்திரன் அவையில் எழில் பெற்றிலங்கும் தேவமாதரில் ஒருத்தியோ என ஐயுறத்தக்க அவள், வெளியிடற் கரியதோர் மனக் கவலை யுற்றிருந்தனள் என்பதை அவள் முகம் காட் டாமற் போகவில்லை. அவள் கற்பாறையின்மீது அமர்ந்து ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தாள்.

அந்நிலையில் அங்கு ஓராடவன் தோன்றினன். அவன் கட்டழகமைந்த காளை. அவனது அகன்ற மார்பும், பருத்த தோள்களும், நீண்ட கரங்களும், பரந்த முகமும், அகன்ற நெற்றியும், உயர்ந்த தோற்றமும், வசீகரமும், யாவர் மனத்தையும் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தன. அவனைப் பின் தொடர்ந்து மூவர் வந்தனர். அந்நால்வரையும் கண்ட கற்பாறையின்மீது அமர்ந்திருந்த நங்கை எழுந்து நின்றனள். அவர்கள் நெருங்கியதும் அம் மங்காதேவி நாணி ஆங்கிருந்த மல்லிகைப் பூம்பந்த ரின் அருகு சென்று ஒதுங்கி நின்றாள். பின் வந்த மூவரும் ஆங்காங்குப் பூக் கொய்வார்போல விலகிடத் தனித்து நின்ற இராஜ ராஜன் அம்மங்காதேவியை அணுகினன். அம்மங்காதேவி சற்று நாணமடைந் தனளேனும் அத்தை மகன் ஆதலின் ஒருவாறு துணிந்து பேசத் தொடங்கினள். இராஜ ராஜன்

அம்மங்காதேவியின் அழகு வெள்ளத்தில் திளைத்து ஆடினன். அம்மங்காதேவி இராஜ ராஜனது காம்பீரிய உருவத் தோற்றதால் கவரப்பட்டாள். இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். கருத் தொருமித்தது. இராஜ ராஜனையே அம்மங்காதேவி மணப்பதென உறுதி செய்துகொண்டனள். பொழுது பட்டது கண்டு அனைவரும் அரண்மனையை அடைந்தனர்.

தண்ணிலாப் பரப்பும் மதியப் புத்தேள் அன்று இரவு களங்கமற்று வட்ட வடிவோடு தோன்றினன். பால்போல் வெண்ணிலவு பரந்து வீசியது. இராஜேந்திரன் தன் மனைவிமார்களிடம் அம்மங்காதேவியின் மணத்தைப்பற்றிக் கலந்து பேசினன். குந்தவையின் விழைவை அவர்களுக்கு எடுத்துரைத்தனன். அவர்களும் விமலாதித்தன் மகனாகிய சளுக்கிய இராஜ ராஜனுக்கு அம்மங்காதேவியை மணஞ் செய்து கொடுப்பதே முறை என்று கூறினர். பின், அங்கிருந்த அம்மங்காதேவியை நோக்கி அவள் கருத்து யாதென இராஜேந்திரன் கேட்டனன். அவள் எங்ஙனம் பதில் கூறுவள் ? நாணம் என்பது நங்கையரின் இயல்பான குணங்களுள் ஒன்று அன்றோ ? அதனால் தன் சம்மதத்தைக் குறிப்பால் தெரிவிப்பாள்போல அவள் தலை குனிந்து புன்முறுவல் பூத்து நின்றாள். இராஜேந்திரனுக்கு அளவிலா மகிழ்ச்சி பொங்கிற்று. அவ் விஷயத்தை அறிந்த குந்தவை அடைந்த களிப்பிற்கு எல்லை யில்லை.

மறுநாள் இராஜேந்திரன் தன் அவையிலிருந்த கணித நூல் வல்லாரைக் கூவி மணவினைக்கு உரிய நாளி

னைக் குறிக்கும்படி கூறினன். நன்னாளும் குறிப்பிடப் பட்டது. திருமணப் பத்திரிகைகளைத் தூதர்கள் பலர் கொண்டு சென்று பல நாட்டரசர்களுக்கும், கனவான்களுக்கும், செல்வர்களுக்கும் அறிவித்தனர். வேங்கி நாட்டில், இராஜராஜனுக்கு அம்மங்கா தேவியை மணஞ்செய்துகொடுக்கப் போகின்றனர் என்னும் செய்தி எங்கும் யாவர்க்கும் அறிவிக்கப் பட்டது. சேர, பாண்டிய, ஈழ நாடுகளிலும் செய்தி அறிவிக்கப்பட்டது. சோழ நாட்டில் எங்கும் அம் மங்காதேவியின் திருமணச் செய்தி அறிவிக்கப் பட் டது. சோழ நாட்டு மக்கள் தத்தம் பெண்களுக்கு மணவினை நிகழ்வது ஒப்ப மகிழ்ந்தனர்.

சோழ நாடெங்கும் அலங்கரிக்கப்பட்டது. கங்கை கொண்ட சோழ புரம் பொன்னாட்டு அமராவதியோ என்று ஐயுறும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டது. அக்காலத்திற்கு முன்னும் பின்னும் கங்கை கொண்ட சோழ புரம் அவ்வாறு அலங்கரிக்கப்படவே யில்லை என்று துணிந்து கூறலாம். மணவினைநாள் நெருங் கிடப் பல்வேறு நாட்டு மன்னர்களும், செல்வர்களும், மற்றுள்ளோர்களும் கங்கை கொண்ட சோழ புரத் தில் மிகுந்து காணப்பட்டனர். இராஜேந்திரன் அவரவர்களுக் குரிய முறையில் வசதிகள் பல செய் வித்தனன். எல்லோரும் அந்நகரின் பொலிவு கண்டு வியப்புற்றனர்.

மணவினை நாள் நணுகியது. அம்மங்காதேவியைப் புண்ணிய நீரில் மங்கள ஸ்நானம் செய்வித்து ஈரம் புலர்த்தி, நல் ஆடை உடுத்தி, ஆபரணங்கள் அணி வித்து, மலர்மாலை சூட்டி, அறியாமையால் அழகி

னுக்கு அழகு செய்து அரதன பீடமிசை அமர்வித்தனர். இராஜ ராஜனை பன்னீர்கொண்டு நீராட்டி, ஈரம் புலர்த்தி, நல்லாடை யணிவித்து, ஆபரணங்கள் சூட்டிக் கையில் உடைவாள் கொடுத்து அரதன பீடமிசை அம்மங்காதேவியின் அருகில் அமர்வித்தனர். எல்லா நாட்டு மன்னர்களும் நெருங்கிக் குழுமி அவரவர்கட்குரிய ஆதனங்களில் அமர்ந்திருந்தனர். பல்வேறு வகைப்பட்ட வாத்தியங்களின் ஒலி எழு கடல் ஒலியையும் அடக்கிற்று. முகூர்த்த ஓரை நணுகுதலும் இராஜ ராஜன் மங்கலநாணைக் கையிற்கொண்டு பல்லோர் வாழ்த்த, மங்கையர் பல்லாண்டு பாட, அந்தணர் வேத மொழி கூறி வாழ்த்த, வாத்தியங்கள் ஒலிக்க, யாவர் மனமும் குதூகுலமடைய அதனை அம்மங்காதேவியின் கழுத்தில் புனைந்தனன். திருமணம் செவ்வனே நடந்தேறியது.

இராஜ ராஜன் பெற்ற பொருள்களின் விமரிசையை யாவரே எடுத்து இயம்ப வல்லார்? இராஜ ராஜ சோழன் தன் மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணம் புரிவித்துச் சளுக்கிய குல சம்பந்தத்தை பெற்றவாறு போல, இராஜேந்திர சோழனும் தன் மகள் அம்மங்காதேவியை விமலாதித்தன் மைந்தனை இராஜ ராஜனுக்கு மணம் புரிவித்துச் சளுக்கிய குல சம்பந்தத்தை விடாது பெற்றனன் என்று எல்லோரும் போற்றிக் கூறினர். இராஜேந்திரன் அனைவருக்கும் பெருவிருந்து நடத்தினன். சுருங்கச் சொல்லில் அம்மங்காதேவியின் திருமணத்திற்கு வந்தவர்கள் ஒரு மாத காலம்வரைச் சோழ நாட்டில் தங்கி விருந்துண்டு களித்திருந்தனர். இராஜேந்திரன்

அனைவருக்கும் வரிசைகள் வழங்கினன். பின், யாவரும் களிப்போடு தம்தம் நாடுகளை யடைந்தனர். சளுக்கிய இராஜ ராஜனும் அம்மங்காதேவியும் அள விளா மகிழ்ச்சி பொங்க அன்புற்று இன்புற்று வாழ்வா ராயினர். இராஜேந்திரன் அவர்களை ஒரு வருடகாலம் கங்கை கொண்ட சோழ புரத்தில் வைத்துக்கொண் டிருந்தனன். மாதங்கள் பல கடந்தன.

விமலாதித்தனும் குந்தவையும் தம் நாடு செல்ல விழைந்தனர். இராஜேந்திரன் அவர்களுக்குச் சீரும் சிறப்பும் செய்து அனுப்பினன். சளுக்கிய இராஜ ராஜனும் அம்மங்காதேவியும் அவர்களுடன் செல்ல வேண்டியவர்கள் அன்றோ? இராஜேந்திரன் தன் மகள் அம்மங்காதேவிக்குத் தான் அருமையாகப் பெற்ற பல்வேறு நாட்டு அரும்பொருள்களையும் சீதன மாக அளித்தனன். யாவற்றையும் பெற்றுக்கொண்டு அம்மங்காதேவி, தாய்மார்களிடத்திலும், தந்தை யிடத்திலும், தமையன்மாரிடமும் பிரிவாற்றாமை யால் வருந்தி அரிதில் விடைகொண்டு வேங்கி நாட் டிற்குச் செல்லப் புறப்பட்டனள். இராஜேந்திரன் அம்மங்காதேவியின் பிரிவுக்காற்றாது வருந்தினன்; கண்களில் நீர் முத்துமுத்தாய் வடிந்தது. இது இயல்பே அன்றோ! வளர்த்த ஒரு கடமையையே கொண்ட முற்றத்துறந்த கண்ணுவ முனிவரும் சகுந் தலையின் பிரிவாற்றாமைக்கு வருந்த வில்லையா? பெண் கள் மணத்தின்பின் தத்தம் நாயகரிடம் வாழும் கடப் பாடு உடையவர்கள் என்று ஒருவாறு தேறி இராஜேந் திரன் ஆற்றி யிருந்தான்.

வேங்கி நாட்டு மக்கள் விமலாதித்தனையும், குந்த

வையையும் வரவேற்றவாறு போலப் புதிய இளவரசு தம்பதிகளை அன்புடன் வரவேற்றனர். எல்லோரும் மகிழ்ந்து பல் விருந்துகள் நடத்தித் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். வேங்கி நாட்டை யடைந்த அம் மங்காதேவி இராஜ ராஜனேடு அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தாள். ஆண்டுகள் சில கடந்தன. இறைவன் அருளால் அம்மங்காதேவி வயிறு வாய்த்தாள். தன் மகள் கருப்ப முற்றிருப்பதை அறிந்த இராஜேந்திரன் அவளைக் கங்கை கொண்ட சோழ புரத்திற்கு அழைத்து வந்தான். பத்து மாதங்களும் கடந்தபின், நன்னளில் நல் ஓரையில் அம்மங்காதேவி ஓர் ஆண்மகவை யீன்றுள். அக்குழந்தைக்கு இரண்டாம் இராஜேந்திர சோழ தேவன் என்ற பெயரிட்டனர். அவனே பின், குலோத்துங்க சோழன் முதலாவான் என்று அழைக்கப் பெற்றனன். அவனை உபய குல உத்தமன் என்று மக்கள் போற்றிக் கூறினர். அவன் சரிதையை ஒரு தனி நூலில் விரிவாகப் படிப்போம்.

9. கடாரப் படை எடுப்பு

இராஜேந்திரன் களிப்பென்னும் கடலுள் மூழ்கியிருந்தான். பல்வேறு நாட்டு மன்னர் வந்து திறை அளக்க அவன் சோழ நாட்டை இனிது பாலித்து வந்தனன். அவனுடைய திறலும், புகழும் உலகமெங்கும் பரவியது. தமிழ்நாட்டு மன்னர்களில் தலைசிறந்து விளங்கிய அவன், நிலப்படை, கடற்படை எனும் இருவகைப் படைகளையும் வைத்துக்கொண்டு நாட்டை இனிது காத்து வந்தனன்.

> "படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு"

என்பதுபோல் அறுவகை அங்கங்களும் அவனிடம் அமைந்திருந்தமையின் அவன் சிங்கவேறுபோல் விளங்கினுன்.

'பர்மா' என்று இக்காலத்தில் வழங்கும் நாட்டிற்குப் பண்டைக்காலத்தில் 'கடாரம்' என்று பெயர். அத்தேசம் மலைகளும், காடுகளும், நதிகளும் நிறைந்து செழிப்புற்று விளங்குவதாகும். அத்தேசத்தில் பிரம்மபுத்திரா, ஐராவதி முதலிய பெரு நதிகள் ஓடுகின்றன. அத்தேசம் பொன்னுலகோ என்று போற்றிக் கூறத் தக்கதாய்ச் செழுமை பெற்று விளங்கியதாதலின் இன்ப நலன் எய்த விரும்புவோர் அந்நாட்டையே மகிழ்ந்து சென்றடைவர். ஆதலின் அத்தேசத்தை அனைவரும் போக பூமி என்று போற்றிக் கூறுவர். அத்தேசத்து மக்கள், தம்மைப் பூமியில் சஞ்சரிக்கும்படி

வானுலகத்தினின்றும் வந்த ஒருவகைத் தேவகுலத் தவர் என்று கூறிக்கொள்வர். அத்தேசத்து மக்கள் குட்டையாயும், மஞ்சள் நிறமுள்ளவர்களாயும் இருப் பர். அவர்கள் தம்மை ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக்கொள்வதிலும், விருந்துகளுண்டு மகிழ் வதிலும், ஆடல் பாடல்களில் பொழுது போக்கு தலிலும் மிக்க விருப்பமுடையவர்கள். சிக்கன வாழ்க்கை அவர்களிடத்துச் சிறிது மில்லே. பல் வேறுவகைத் தானியங்களும், பல்வேறுவகை உலோ கங்களும் கிடைத்தலே அதற்குக் காரணமாகும்.

செல்வத்தால் நிறைந்த அத்தேசத்தரசர்கள் பண்டு தமிழ் நாட்டிலும் வந்து **நாகைப்பட்டினம்** முதலான நகரங்களேக் கைப்பற்றி யாட்சிபுரிந்து வந்தனர் என்று தெரிகிறது. நாகைப்பட்டினம் துறைமுக நகரமா யிருத்தலின் அதனை அவர்கள், முன், கைப்பற்றி ஆண்டுவந்தனர். இராஜேந்திர சோழனுடைய தந்தை யாகிய **இராஜ ராஜ சோழன்** காலத்தில் பர்மா எனப்படும் கடார தேசத்தைச் **சூளாமணி வர்மன்** என் போன் ஆட்சி புரிந்து வந்தனன். தமிழப் பேர் இலக்கியங்களேயும் தமிழ் அரசர்களின் சரித்திரங் களேயும் நன்கு ஊன்றிக் கற்று அறிவோமாயின் பர்மியர் எனப்படும் கடார தேசத்தவர்கள் தமிழர் களின் ஒரு வகையினர் என்றே கூறத் துணிந்திட லாம். பர்மியர் பௌத்த மதத்தைத் தழுவியவர் ஆவர். சூளாமணிவர்மன் நாகைப்பட்டினத்தில் ஒரு பௌத்தாலயத்தைப் பெரும் பொருள் கொண்டு கட்டுவிக்க ஏற்பாடுகள் செய்தான். ஆலயத் திருப் பணி முடிவடைவதற்குள் அவன் மண்ணுலக

வாழ்வை நீத்தான். அவனுக்குப் பின் அவன் மகன் **மாறவிஜயோத்துங்கன்** என்பான் அரசனானன். தந்தையால் தொடங்கப் பெற்றுப் பூர்த்தி பெருத ஆலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்தவன் அவனே. மாற விஜயோத்துங்கன் சோழ வரசனான இராஜ ராஜ சோழனை அணுகி நாகைப்பட்டினத்தில் கட்டப் பெறும் அப்பேர் ஆலயத்திற்கு அவன் பெயரால் **"இராஜ ராஜப் பேரும்பள்ளி"** என பெயரிடக் கேட்டனன். இராஜ ராஜனும் அதற்கிசைந்து தன் பெயரையளித்ததுமன்றி **ஆனைமங்கலம்** என்னும் வளப்பம் பொருந்திய கிராமத்தையும் அவ்வாலயச் செலவிற்கு அளித்தனன். ஆதலினுல் இராஜ ராஜ சோழன் கால முதல் சோழர்கட்கும் கடார தேசவரசர்களுக்கும் நட்புண்டு.

இராஜேந்திர சோழன் காலத்தில் கடாரத்தை மாற விஜயோத்துங்கன் மகனான **'சங்கிராம விஜயோத்துங்கன்'** என்பான் ஆண்டு வந்தான். அவன் தந்தையையும், பாட்டனையும்போல் சோழர்களிடத்து அவ்வளவு உறவுகொள்ள வில்லை. பர்மியர் இயல்பாகவே செருக்குடையவர்கள். சங்கிராம விஜயோத்துங்கன் மிகச் செருக்குற்றுச் சோழர்களைப் பொருட்படுத்தாது இருந்தனன். அதனை அறிந்த இராஜேந்திர சோழன் அவனைப் போரில் வலியழித்து வென்று அத் தேசத்தையும் தன்னடிப் படுத்திக் கொள்ளவேண்டும் என்று உறுதிகொண்டான். உடனே, அவன் கடற் படைகளைத் திரட்டிக்கொண்டு கடார மன்னவனோடு போர் புரியச் சென்ருன். போகும் வழியில் இராஜேந்திர சோழன் **'மாநக்கவாரத் தீவுகள்'** எனப்படும்

நிக்கோபார்த் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டான். மற்றும், மேவிலிபங்கம், வளைப்பந்தூர், தலைத்தக் கோலம் முதலிய நாடுகளும், மதமாலிங்கமும், இலாமுரி தேசமும் அவன் கையகப்பட்டன. இராஜேந்திரன் பெரும்படையுடன் சென்று கடாரத்தின் கடற்றுறை நகரமாகிய மாப்பபாளம் என்னும் இடத்தை அடைந்தான். சோழன் தூதனுப்பிக் கடார மன்னனைப் போருக் கழைத்தனன். கடார மன்னன் முதலில் சினந்து, செருக்கால் சோழனைத் தன்னுட்டுக் கட்டற்றுறையில் எளிதில் வெல்லக்கூடும் என நினைத்துப் போருக்கெழுந்தனன். இருதிறத்தார் சேனைகளும் மாப்பாளத்தில் கலந்தன. போரும் மூண்டது. நெடுநாட்கள்வரைப் போர் நடக்கவில்லை. சோழன் படைவலி மிகுதியும் பெற்றவன். மற்றும், அவன் வீரர்கள் யுத்த முறையை நன்கு பயின்றறிந்தவர்கள். ஆதலின் கடார மன்னனுடையபடை வலியை அழித்தல் இராஜேந்திரனுக்கு எளிதாகவே தோன்றிற்று.

கடார மன்னன் வெகு திறமையோடும் தன் சேனைகளை நடத்திச் சென்றுனேனும் அவனல் சோழன் சேனையைத் தாக்கி வலி யழிக்க வியல வில்லை. தோல்வி தனதே யாகும் என உணர்ந்த சங்கிராம விஜயோத்துங்கன் சோழனைப் பணிய நேர்ந்தது. மாப்பபாளம் சோழன் வசமாயிற்று. கடார மன்னன் கப்பங் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டனன். மற்றும், இராஜேந்திரனைத் தன் அணி நகரத்திற்கு அழைத்துக்கொண்டு சென்று சிறப்புக்கள் செய்தான். தன் நாட்டில் உண்டாகும் அரும் பொருள்கள் பலவற்றையும்,

பொன்னும், மணியும், யானைகளும் கணக்கின்றிக் கடார மன்னன் சோழனுக்கு அளித்து நட்புப் பூண்டனன். இராஜேந்திரன் யாவற்றையும் கொண்டு சேனைகள் சூழ வாகை சூடி ஓகையோடு சோழ நன்னாட்டை யடைந்தனன். அலைகடல் நடுவில் பல கலம் செலுத்தி அமர் புரிந்து வெற்றி கொண்டு பெரும் பொருளீட்டி ஒப்பில்லாப் புகழொடு விளங்கிய இராஜேந்திரனைத் தமிழ் மக்கள் போற்றிக் கூறினர். அவன், கங்கை முதல் குமரிவரைக் கடாரமும் உட்பட விளங்கும் பெரிய நாட்டை யுடையவனாய்ப் பாரததேசத்தில் சிறப்புற்று விளங்கிய தமிழ் மன்னன் ஆயினன்.

10. இராஜேந்திரன்

அரசியல், குணம், இறுதிக் காலம்

ஒப்பற்ற தனிவெண் குடையின்கீழ்ப் பாரத தேசத்தின் பெரும் பாகத்தைத் தன் ஆட்சிக் குட்படுத்தி அரசு புரிந்துவந்த இராஜேந்திரனுடைய அரசியல் முறை மிகவும் கீர்த்தி பெற்றதாய் விளங்கிற்று. அவன் தன் நாட்டை யளந்து கொடுத்து ஆறில் ஒரு பாகம் அரசிறையாகக் கொண்டான். நாட்டின் நலத்தை அவன் நாடி உழைத்தவன் ஆதலின் மக்களுக்குப் போக்கு வரவிற் குரிய சாதனங்களைச் செவ்வனே ஏற்படுத்தியிருந்தான். மற்றும், வாணிபம் பேணியே ஒரு நாட்டின் செல்வநிலை ஓங்கவேண்டும் என்னும் கொள்கையுடையவன் இராஜேந்திரன். ஆதலின் அவன் கிரீஸ், பாரசீகம், முதலிய தேசத்தாரோடு வர்த்தகம் நடத்த துறைமுகங்களையும், கலங்களையும் உண்டாக்கினன். கலமேறிச் சென்று வாணிபம் பேணுவார்க்குப் பிறரால் இடையில் இடையூறு நேரா வண்ணம் கடற்படை கொண்டு காத்து வந்தனன். கல்வியே கண் என அறிந்த அவன் நாட்டில் எங்கும் கல்விச்சாலைகளும், நூல்நிலயங்களும் நிறுவி மக்களுக்குக் கல்வியறிவை யூட்டி வந்தனன். நீர்நிலைகள், தொழிற்சாலைகள், குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், சத்திரங்கள், வைத்தியசாலைகள் முதலியனவற்றையும் உண்டாக்கினன். நாட்டில் உள்ள மக்களுக்குத் தன்

னாலும், சுற்றத்தாராலும், பகைவராலும், விலங்குகளாலும், கள்வராலும் உண்டாகும் தீங்குகளை நீக்கி அவன் ஆட்சி புரிந்து வந்தனன். நுண்மதி வாய்ந்த தொல்குல வமைச்சரோடு நாளும் உசாவி நாட்டிற்கு நல்லன புரிந்து வந்தான். ஆதலின், அவனாட்சி மாட்சியுற்று விளங்கிற்று. மக்கள் யாவரும் மாண்புற்று மகிழ்ந்து வாழ்வாராயினர். நாட்டின் செல்வநிலை மேம்பட்டது. அனைவரும் இராஜேந்திரனைப் புகழ்ந்து கொண்டாடினர்.

இராஜேந்திர சோழன் நிறைந்த கல்வி படைத்தவன். கற்றோர்களை ஆதரிக்கும் பெருந்தகையாக அவன் விளங்கினான். அவன் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவர்கள் தங்கள் உடன்பிறப்பாகிய வறுமையென்பதை யறியாதவர்களாய் இனிது வாழ்ந்து வந்தனர். "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்பது பொய்யாகுமா? "பாம்பறியும் பாம்பின கால்" என்பது பழமொழி. கல்வியின் பெருமையை நன்குணர்ந்த இராஜேந்திரன் கற்றோர்களை ஆதரித்தான் என்பது அவன் தன் கடமையை நன்குணர்ந்திருந்தான் என்பதே யன்றோ?

இராஜேந்திரன் அந்தணர்களிடத்து நிறைந்த அன்பு உடையவன். கல்வியும் ஒழுக்கமும் உடைய அந்தணர்களை அவன் கடவுளின் பிரதிநிதிகள் எனவே கொண்டு போற்றிவந்தனன். தந்தையைப்போல் தானும் கௌடம் முதலிய தேசங்களினின்றும் அந்தணர்களை வரவழைத்து அவர்களுக்கு நிலமும், மனையும், செல்வமும், பிறவும் அளித்து அன்போடு போற்றிவந்தனன். அன்போடு ஈகையும் பொருந்தப்

பெற்ற அம்மன்னன் காலத்தில் சோழ நன்னாட்டில் வறுமைக்கு வறுமை வந்தது. ‘சோழ நாடு சோறுடைத்து’ என்னும் செஞ்சொல் வாக்குப் பொய்ப்படவில்லை என்றே அக்காலத்தார் கூறுவர்.

“அஞ்சமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்றிந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு” என்னும் பொய்யாமொழியை அவன் மெய்யாக உணர்ந்திருந்தான். எக்காலத்தும் அவன் பெருங்கோயிலில் அந்தணர் வாழ்த்தொலியும, புலவர் கூறும் மெய்க்கீர்த்தியின் ஓலியும் நிறைந்திருந்தது.

இராஜேந்திரன், கல்வியறிவிற் கேற்ப நல்லொழுக்க முடையவன். தெய்வ நம்பிக்கையுடையவன் அவன். தந்தையைப்போல் சைவ சமயத்தைத் தழுவியவனே என்றாலும் பிற மத வெறுப்பில்லாதவன். சைவ மதத்திற்கும், சைவ மதத்தவர்கட்கும் எவ்வளவு நன்மைகளை அவன் செய்வானே அவ்வளவு நன்மைகளை அவன் பிற மதங்களுக்கும், பிற மதத்தவர்களுக்கும் செய்துவந்தனன். அவன் காலத்தில் வைணவ சமயத்தில் சிறந்து விளங்கிய பெரியார் ஸ்ரீமந் நாதமுனிகள். அப்பெரியார் இராஜேந்திர சோழனுடைய அருங்குண நலன்களையும், கல்வியறிவையும், ஒழுக்கத்தையும், பொதுநோக்கத்தையும், பிறவற்றையும் கண்டு மகிழ்ந்து அவனிடம் பன்முறையும் சென்று வதிந்தார். அக்காலங்களில் அப்பெரியார் நல்லுரைகளைக் கூறி அறிவுறுத்துவார். இராஜேந்திரன் அப்பெரியாரை உள்ளன்போடு வரவேற்றுத் தக்கவாறு உபசரித்து அனுப்புவான். ஸ்ரீமந் நாதமுனிகள் அவனை விட்டுப் பிரிந்திருக்க

மனமிசைந்திலராய் அவனேடு கங்கை கொண்ட சோழ புரத்திலேயே இருந்து அவனுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி முடிவில் அவ்வூரிலேயே அப்பெரியார் தம் பூத உடலை நீத்தார்.

இராஜேந்திரன் தந்தையைப்போல் தானும் ஓர் சிவாலயம் எடுக்க எண்ணினான். அதனைக் குறித்து அவன், தன் நுண்மதி யமைச்சரோடும் பெரியார்களோடும் உசாவினான். அவர்களும் அரசன் கருதியது மாண்புடையதே என்றனர். பின், அரசன் கட்டளைப்படி ஆலய மெடுக்கப் பல்வேறு நாடுகளினின்றும் பொருள்கள் சேகரிக்கப்பட்டன. பல் வேறு நாட்டுக் கொல்லர்களும், தச்சர்களும், பிறதொழிலாளர்களாலும் கங்கை கொண்ட சோழ புரத்திற்கு அழைத்துவரப்பட்டனர். நல்லோரால் குறிப்பிடப்பட்ட நல்ல தினத்தில் ஆலயத் திருப்பணியும் தொடங்கலாயிற்று. இராஜேந்திரன் தானே நேரிலிருந்து ஆலயத் திருப்பணியைக் கண்காணித்து வந்தான். சில வாண்டுகளில் ஆலயத் திருப்பணியும் முற்றுப் பெற்றது. கங்கை கொண்ட சோழ புரத்தின் நடுவில் விண்முட்டும் வியன் பெருஞ் சிகரத்தையுடைய நெடு நிலைக்கோபுரம் பல்வேறு வகைப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறக்கக் கண்களுக்கு விருந்தெனத் திகழ்ந்தது. இராஜேந்திரன், நன்னாளில் சிவபெருமானின் அருட்குறியாகிய லிங்கத்தைப் பிரதிட்டை செய்தான். கும்பாபிஷேகம் செவ்வனே நடந்தேறியது. அந்தணர் முதலிய அனைவரும் உண்டியும், உடையும், பொருளும் பெற்று இன்புற்றனர். இராஜேந்திரன்

அவ்வாலயத்திற்குக் 'கங்கை கொண்ட சோளீசுவரம்' என்று பெயரிட்டான். அவனுடைய கடவுள் பக்தியைக் கண்டு அனைவரும் வியந்தனர். கருவூர்த் தேவர் என்றழைக்கப்படும் பெரியார் தம் திருவிசைப்பாவில் கங்கை கொண்ட சோளீசுவரத்தைப் பாடியுள்ளார். இராஜேந்திரன் அத்திருக்கோயிலுக்குத் தன் நாட்டிலுள்ள நல்ல வளப்பமுள்ள கிராமங்கள் பலவற்றை இனமாக வளித்து, நித்திய நைமித்திக பூஜைகளையும், திருவிழாக்களையும் சிறப்பாக நெறிமுறை கடவாது நடத்தி வந்தனன். ஆலய தரிசன மின்றி இராஜேந்திரன் உணவு கொள்ளான் என்றால் அவனுடைய கடவுள் பக்தியை இயம்பவும் வேண்டுமோ?

இராஜேந்திரன், தந்தையால் தஞ்சையில் கட்டப் பெற்ற இராஜ ராஜேச்சரம் என்னும் தேவாலயத்தில் திருப்பணி புரிந்துகொண்டிருந்த சர்வ சிவ பண்டித சைவாச்சாரியர்களுக்குக் கி. பி. 1030ல் 'ஆடவல்லான்' என வழங்கிய அக்காலத்து மரக்காலால் இரண்டாயிரக் கல நெல் வருமானமுள்ள நிலத்தை இனமாக அளித்துள்ளான் என்று இராஜ ராஜச்சரத்துச் சாஸனம் ஒன்று அறிவிக்கின்றது. மற்றும், கணபதிநல்லூர் சாஸனத்தினால், இராஜேந்திரன் கி. பி. 1020ல் திருவண்ணாமலை என்னும் தலத்திலுள்ள அருணாசலேசர் ஆலயத்திற்கு அதன் செலவிற்காக நஞ்சை புஞ்சை நிலங்களை இனமாக அளித்துள்ளான் என்றுதெரிகிறது. இதேபோல் கருவூரில் விளங்கும் திருஆநிலை என வழங்கும் கர்ப்ப புரீசர் ஆலயத்திற்கும் நிலங்கள் அளித்துள்ளான் என்று தெரிகிறது.

ஆகவே, இராஜேந்திர சோழன், தன் நாட்டில் விளங்கும் ஆலயங்களுக்கும் வேண்டுவ அளித்துப் போற்றி வந்தனன். இத்தகைய மேம்பாடுற்ற அரசன் கி. பி. 1032ல் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து விண்ணுலகு எய்தினன். இராஜேந்திரனுக்குப் பின் அவன் மகன் 'ஜயங்கொண்ட சோழன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற இராஜ கேசரி இராஜாதி ராஜன் அரியணைமீது அமர்ந்து சோழ நாட்டை இனிது பாலித்து வந்தனன்.

முற்றிற்று

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

Printed at
The Huxley Press
114, Armenian St., G.T., Madras